வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=


# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු







Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 24.02.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 55 பக்கங்கள் : 12

# வழக்குகளை எதிர்கொள்ள தயாராகிறது தமிழரசு கட்சி

## சுமந்திரன் அல்லாத சட்டத்தரணிகள் குழு நியமனம்



கிளிநொச்சி, பெப்ரவரி 24

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்துள்ள கட்சி உறுப்பினர்க ளிடம் வழக்குகளை வாபஸ் பெறக் கோருவது என்றும், நிபந்தனை இல்லாமல் வழக்கு களைக் கைவாங்க அவர்கள் இணங்காவிட்டால், தொடர்ந்து வழக்கு களை எதிர்கொள்வது என்றும் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் கூடி முடி வெடுத்தனர்.

11



## கச்சதீவு திருவிழா ஆரம்பம் இலங்கையர்களே பங்கேற்பு

கச்சதீவு, பெப். 24

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இந்திய பக்தர்களின் வருகையின்மையால் இந்த முறை திருவிழா சோபையிழந்து காணப்பட்டது.

நேற்று மாலை கொடியேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச் சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன.

இவற்றில் இலங்கையை சேர்ந்த சுமார் 4

11

## உயர்பாதுகாப்பு வலயத்தில் ஆலயங்கள் சிதிலமடைவு!

### அங்கு சென்று திரும்பியோர் தெரிவிப்பு

- விக்கிரகங்கள் பலவற்றை காணவில்லை
- நித்தியபூசை நடத்த இந்து குருமார் கோரிக்கை
- 3 ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 24

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள ஆலயங்கள் பராமரிப்பு இன்மையால் சிதில மடைந்தும் - நிர்மூலமாகி யும் காணப்படுகின்றன. அத்துடன், ஆலயங்களில் இருந்த விக்கிரகங்களையும் காணவில்லை என்று நேற்று அங்கு சென்று திரும்பிய மக்கள் தெரிவித்தனர்.

வலி. வடக்கு உயர் பாது காப்பு வலயமாக - படை யினரின் பிடியிலுள்ள 7 ஆலயங்க ளுக்கு சென்று வழிபாடுகளை நடத்த இராணுவத்தினர் நேற்று அனுமதி வழங்கி

11





## போர் குற்றச்சாட்டுக்கு உள்ளான மற்றொரு தளபதியும் சஜித்துடன்!

கொழும்பு, பெப். 24

2009 வன்னி இறுதிப் போரில் ஏராளமான தமிழ் மக் கள் கொல்லப்பட காரணமானவர்களுள் ஒருவராக அறி யப்படும் மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகே ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்துள்ளார்.

நேற்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் "ஊழல் எதிர்ப்புக் கொள்கை மற்றும் அமுலாக்கல் பிரிவின் பிரதா னியாக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன்,

11

## போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 1,500 சிறார்கள் சிறைகளில்!

கொழும்பு, பெப். 24

போதைப்பொருள் குற்றங்களுக் காக ஆயிரம் முதல் ஆயிரத்து 500 வரையான சிறுவர்கள் சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட் டுள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் சந்தன வீர சிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், சிறைச்சாலையில் உள்ள வர்களில் 65 சத வீதமானவர்கள் போதைப்பொருள் பாவனை தொடர்பிலான குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் கூறினார். காலி மாவட்டத் தில் பாடசாலை நிகழ்வு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட விடயங்களைத் தெரிவித்தார். (ஐ)

## கந்தசாமிமலை முருகனின் பௌர்ணமி தின பொங்கலை தடுத்து நிறுத்தியது பொலிஸ்!

திருகோணமலை, பெப். 24

தென்னமரவாடி மக்கள் கந்தசாமி மலை முருகன் ஆலயத்தில் நடத்திவரும் பௌர்ணமி தினப் பொங் கலை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். ஆயுதங்களு டன் ஆலயம் இருந்த - பொங்கல் நடைபெறும் இடத்துக்குள் நுழைந்த நூறு வரையிலான பொலி ஸாரும் விசேட அதிரடிப் படையினரும் அங்கிருந்த மக்களை வலிந்து வெளி யேற்றினர் என்று அங்கி ருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கந்தசாமி மலையில் பழமை வாய்ந்த முருகன் ஆலயம் இருந்த இடத்தில் தென்னமரவாடி கிராம மக் கள் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் பொங்கல் பொங்கி வழிபாடாற்றி வரு கின்றனர். இந்தப் பொங்க லில் திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் பங்கேற்பது வழமை.

வழக்கம்போன்று, நேற்று வெள்ளிக் கிழமையும்

11




### தென்னமரவாடி - கந்தசாமி மலை

தென்னமரவாடி பிரதேசத்தின் ஒரு கிராமமே கந்தசாமி மலை. இந்தக் கிராமத்தில் 1984 டிசெம் பர் 3ஆம் திகதி இனப் படுகொலை இடம்பெற் றது. இதைத் தொடர்ந்து, இந்தக் கிராமத்தை சூழ 3 படுகொலைகள் இடம்பெற்றன. இந்தப் படுகொலைகளை இராணுவத்தினரும் ஊர் காவல் படையினரும் முன்னெடுத்திருந்தனர்

11

## பஸ்ஸிலிருந்து இளைஞர் தவறிவீழ்ந்து உயிரிழப்பு

### நல்லூர் ஆலயம் முன்பாக சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 24

மினிபஸ்ஸிலிருந்து இருந்து இறங்க முனைந்தவர்க ளுக்கு வழிவிட முயன்ற இளைஞர் மிதிபலகையிலிருந்து தவறிவிழுந்து பஸ்ஸின் சில்லுக்குள் அகப்பட்டு உயிரிழந்தார்.

நல்லூர் ஆலயத்தின் முன்பாக யாழ்ப்பாணம்

11

## புலம்பெயர் இலங்கையர்களை கணக்கெடுக்கும் பணி விரைவில்

கொழும்பு, பெப். 24

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை கணக் கெடுக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என வெளிநாடு வாழ். இலங்கையருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் வீ. கிருஷ்ணமூர்த்தி தெரி வித்தார்.

11

# இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவர் நீண்டகாலத்துக்குப் பின்னர் தொலைபேசியில் பேசினார். அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டாலே நீண்ட நேரம் உரையாடுவார் என்பதும் அவர் சொல்வதை நாங்கள் கேட்காமல் விடமுடியாது என்பதும் தெரிந்திருந்ததால் அவர் சொல்வதைக் கேட்டுத்தான் விடுவோமே என்று பேசிக்கொண்டிருந்தேன்.

அண்மையில், எமது ஆசிரியத் தலையங்கத்தில் இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்திருந்தமை பற்றி எழுதியிருந்தமை அவருக்கு நெருடலைக் கொடுத்திருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்த சில மாதங்களில் தமிழ் மக்கள் அதன் வலியோடு தேர்தலை சந்தித்த காலம். அவர்களின் முழுநோக்கமும் அந்த வலியைத் தந்த மகிந்தவை தோற்கடிக்கவேண்டும் என்பதுதான். அதாவது, "எய்தவன் இருக்க அம்பை தண்டிக்கவேண்டியதில்லை" என்பதுதான் என்றார் நண்பர்.

மகிந்தவும் கோட்டாவும் பிறப்பித்த உத்தரவைத்தான் அவர்கள்- அதிகாரிகள் செய்தார்கள். அப்படி உத்தரவு விடுக்கப்படவில்லை என்றால், அங்கே மக்கள் பலியாவதற்கு தாங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும். நிச்சயம் அதிகாரிகள் அப்படி மக்கள் ஆயிரக்கணக்கில் பலியாவதை விரும்பியிருக்கமாட்டார்கள். எனவே, இந்த யுத்தத்தை நடத்தியவர்கள் தமது படையினருக்கு ஆணை பிறப்பித்தவர்கள் மகிந்தவும் கோட்டாவும்தான். அதனால்தான் அவர்கள் மகிந்தவை தோற்கடிக்க யுத்தத்துக்கு தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள். ஆனால், நீங்களோ தொடர்ந்து சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்கும் முடிவை கண்டித்து வருகின்றீர்கள். இதுதான் அந்த நண்பரின் வாதம்.

அவரின் வாதம் சரியானதுதான். ஆனால், அதனால் தமிழ் மக்கள் அடைந்தது என்ன? பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் மகிந்தவை தோற்கடிப்பதற்காக மைத்திரியை ஆதரித்தோம். அந்த தேர்தல் முடிவடைந்த பின்னர், தமிழ் வேட்பாளராக சம்பந்தன் களம் இறங்கியிருக்கலாமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர் ஒருவரிடம் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் கேட்கப்பட்டபோது, அவர் சொன்னார்:

'அப்படியொரு யோசனையை பலரும் சொன்னார்கள். அது ஒரு நல்ல முயற்சிதான். ஆனால், சம்பந்தன் ஐயா இந்தத் தேர்தலில் மகிந்தவை தோற்கடிக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அவர் வெல்வதற்கு சிறிய சந்தர்ப்பத்தைக்கூடக் கொடுத்துவிடக்கூடாது என்பதால்தான் அந்த முயற்சியை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று.

ஆக, தமிழ் பொதுவேட்பாளர் என்பது நல்ல யோசனைதான் என்று அப்போது கூட்டமைப்பினரும் ஏற்றுக்கொண்டிருந்தனர். ஆனால், அதற்கு அடுத்த தேர்தலுக்கு வேட்புமனுக்கள் தாக்கல் செய்தவற்கு சில வாரங்களுக்கு முன்னதாக அப்போது தமிழ் மக்கள் பேரவை என்று ஆரம்பிக்கப்பட்டிருந்த சிவில் சமூக அமைப்பு, தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களத்தில் இறக்குவதற்கு கடைசி நேரத்தில் முடிவெடுத்து அதற்காக ஓர் 'ஓட்டம் ஒன்று ஓடியது'.

ஆனால், அவர்களால் பொருத்தமான வேட்பாளரை கண்டுபிடிக்க முடியாததால் அந்த முயற்சியை கைவிடவேண்டியதாயிற்று. ஆனால், அவர்களின் அந்த முயற்சியை யாரும் அப்போது கேள்விக்கு உட்படுத்தவில்லை. தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடுவது கோட்டாவுக்குத்தானே சாதகமாகும் என்று யாரும் கேள்வி கேட்கவில்லை.

இப்போது நிலைமை முன்னரைப்போல இல்லை. ராஜபக்ஷக்களை என்ன விலைகொடுத்தும் தோற்கடிக்கவேண்டும் என்ற நிலை இப்போது இல்லை. வரவிருக்கும் தேர்தலில் ரணில்- சஜித்- அநுர என்று மும்முனைப்போட்டி நிலவுமானால் எந்த ஒரு வேட்பாளரும் ஐம்பது வீத வாக்குகளை பெறமாட்டார்கள் என்றே கருதப்படுகின்றது. இந்நிலையில் சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் யாருக்கு கிடைக்கின்றதோ அவரே வெல்வதற்கான சந்தர்ப்பமே அதிகமாகக் காணப்படுகின்றது. ஆகக் குறைந்தது தமிழ் மக்களின் வாக்குகள் திரட்சியாக கிடைக்கும் வேட்பாளருக்கு வெல்வதற்கான சந்தர்ப்பம் அதிகம்.

இப்படியொரு நிலையில், எமது இந்த வாக்குகளை வைத்து பேரம் பேசுவதற்கான சந்தர்ப்பமாக என்றாலும் இந்தத் தேர்தலை நாம் பயன்படுத்தவில்லை என்றால், நம்மைவிட முட்டாள்கள் வேறு யாரும் இருக்கமாட்டார்கள்.

தமிழர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது அதில், வெற்றிபெற்று ஜனாதிபதி ஆவதற்காக அல்ல என்பது சிறுபிள்ளையும் புரிந்துகொள்ளக் கூடியதுதான். ஆனால், தமிழ் மக்கள் இந்த நாட்டில் எப்படியான ஓர் அரசியல் வாழ்வை விரும்பி நிற்கின்றனர். எத்தகைய தீர்வை வேண்டி நிற்கின்றனர் என்பதை இந்த நாட்டுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் சொல்கின்ற ஒரு கருத்துக் கணிப்பாக இதனை நடத்திக்காட்டலாம். இப்படியொரு தீர்வை வலியுறுத்தும் ஒரு முயற்சியை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலுள்ள அனைவரும் ஆதரிக்கவேண்டிய கட்டாயமும் ஏற்படும்.

முதலில் அப்படியோர் இலக்கை நோக்கி - பொது வேட்பாளர் என்ற இலக்கை நோக்கி பயணிக்கின்றபோது, போட்டிக் களத்தில் இருக்கும் வேட்பாளர்கள் நமது பிரச்னைக்கு தம்மால் ஆகக் கூடிய எந்தத் தீர்வை முன்வைக்கிறார்கள் என்றும் அறியக் கூடியதாக இருக்கும். அதன் பின்னர்கூட நிலைமைகளை மீண்டும் ஆராய்ந்து முடிவெடுக்கலாம்.

ஆனால், கடந்த மூன்று தேர்தல்களிலும் கண்ணை மூடிக் கொண்டு ஒரு வேட்பாளரை ஆதரித்தமைபோல இந்தத் தடவையும் முடிவெடுப்பது புத்திசாலித்தனமானது அல்ல.

**- ஊர்க்குருவி.**





யாழ்ப்பாணம் நகரின் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்ற தருணம்...! (படங்கள் : ஐ. சிவசாந்தன்)

# ஜனாதிபதி தேர்தலுடன் விளையாட முடியாது!

## எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்



**கொழும்பு, பெப். 24**

**"ஜனாதிபதி தேர்தலுடன் விளையாட முடியாது. எனவே, அரசமைப்பின் பிரகாரம் குறித்தொதுக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்கு அது நடந்தாகவேண்டும்."- என்று பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.**

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந் திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் எஸ்.பி. திஸாநாயக்க கூறியவை வருமாறு,

ஜனாதிபதி தேர்தலை பிற் போடவே முடியாது. இது விட யத்தில் எந்த விளையாட்டும் எடுபடாது. எதிர்வரும் செப் ரெம்பர், ஒக்ரோபரில் தேர்தல் நடத்தப்படும். இதற்கான அழைப்பைத் தேர்தல் ஆணைக் குழு விடுக்கும். தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின்கீழேயே தேர் தல் நடக்கும். அதில் மாற்றம் வராது.

அதேவேளை, நாட்டில் தற் போதுள்ள நிறைவேற்று அதி கார ஜனாதிபதி முறைமைவிட பலமானதொரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையே நாட்டுக்குத் தேவை என்பதே எனது கருத்தாகும். இது எனது தனிப்பட்ட கருத்து, கட்சியின் நிலைப்பாடு அல்ல.

அப்படியானதொருவர் என நினைத்துதான் கோட்டாபய ராஜபக்சவுக்கு வாக்களித்தோம். ஆனால் அது நடக்கவில்லை - என்றார்.

(அ)

# யாழ்ப்பாணத்தில் கைதான கொச்சிக்கடை பெண்கள்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழாவில் நகைத் திருட்டில் ஈடுபட்ட இரண்டு பெண்கள் கைது செய்யப்பட் டனர்.

கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம் பெற்றபோது பெருமளவான பக்தர்கள் ஆலயத்தில் கூடியி ருந்தனர்.

இதனை சாதகமாக பயன்படுத்தி நகைத் திருட்டில் ஈடுபட்ட கொழும்பு கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து நான்கரை பவுண் தாலி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் இருவரையும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்ப டுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

# யாழ்ப்பாணத்தில் 531 பேர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 24

கடந்த ஒரு மாத கால பகுதிக்குள் யாழ்ப்பாணத்தில் 531 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக் களில் யாழ்ப்பாணத்தில் தேடப் பட்டு வந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த சந்தேகநபர்களுக்கு நீதிமன்றங்களினால் பிடியாணைகள் பிறப் பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 301 நபர்களும், சாதாரண பிடி யாணை பிறப்பிக்கப்பட்ட 230 நபர்களுமே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# தமிழ்நாடு பேச்சாளரின் செயலூக்க உரை நாளை!

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம், தமிழ் நாட்டின் விருதுநகர் மாவட்ட றோட்டறி கழகம் என்பன இணைந்து 'யாது மானவள்' பெண்களை மேம்படுத்தும் நோக்கில் செயலூக்க உரை நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தால் மாலை 5 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழ்நாட்டின் பிரபல பேச்சாளர் கலாநிதி ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் உரையாற்றவுள்ளார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
24.02.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தீர்மானகரமான ஜனாதிபதி தேர்தல்!

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தென்னிலங்கையில் தெளிவான உரையாடல்கள் எவையும் இதுவரையில் இடம்பெறவில்லை - அத்துடன், யார் யாருடன் கூட்டு வைத்துக் கொள்வார்கள் - வைத்துக் கொள்ளலாம் என்பது தொடர்பிலும் தெளிவான உரையாடல்கள் இன்னும் இடம்பெறவில்லை. அனைத்துமே ஒரு வகையான மூடுமந்திரமாகவே இருக்கின்றது. ரணில் போட்டியிடுவார் என்னும் தகவல் வெளியாகியிருக்கின்றது. ஆனால், அநுரகுமார திஸநாயக்க போட்டியிடுவார் என்பது மட்டும் சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருக்கின்றது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன அடிப்படையிலேயே ஒரு பலவீனமான வேட்பாளராகவே இருந்தார். மகிந்தவின் முகாமிலிருந்து மைத்திரியின் தலைமையில் ஓர் அணி வெளியேறுகின்றது என்பது மட்டுமே அவரின் தகுதியாக இருந்தது - ஆனாலும் அவரால் சிங்கள மக்களை பெருமளவில் பிளவுபடுத்த முடியவில்லை. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தின் வீழ்ச்சிக்கான பிள்ளையார் சுழி அங்குதான் இடப்பட்டது.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்தல் என்னும் இலக்குக்காக அனைத்து எதிரணிகளும் ஒன்றுபடுத்தப்பட்டன. அவ்வாறானதொரு நிலைமையே தற்போதும் தெரிகின்றது. ஆனால், இதில் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு போட்டியிடுவார் என்பதில் குழப்பங்கள் உண்டு - ஏனெனில், அவர் தற்போது ராஜபக்ஷ குடும்பத்துடன் இணைந்தே செயல்படுகின்றார், அத்துடன், ரணிலின் ஊடாக ராஜபக்ஷக்கள் மீளவும் தங்களை ஒருங்கிணைக்கக்கூடும் என்னும் பார்வையும் உண்டு. இவ்வாறானதொரு சூழலில் எவர் எவ்வாறான தந்திரோபாயத்தின் கீழ் போட்டியிடுவார்கள் என்பதே கேள்வியாக இருக்கின்றது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்ஷ முதலில் இந்தியாவின்மீதே குற்றஞ்சாட்டியிருந்தார். பின்னர், அமெரிக்காவின்மீது குற்றஞ்சாட்டினார். அவ்வாறான குற்றச்சாட்டுகளை ஒரு புறமாக ஒதுக்கிவிடலாம். ஆனால், இலங்கை ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருப்பதால் - இலங்கைத் தீவின் ஆட்சியின் மீது இந்தியா மற்றும் அமெரிக்கா ஆர்வம் காண்பித்தால் - அது ஆச்சரியமானதல்ல. அத்துடன், தெற்காசிய நாடுகளின் உள் அரசியலுக்குள் சீனா அதிகம் ஆர்வம் காண்பித்து வருகின்றது.

நாடுகளின் உள்ளக அரசியலுக்குள் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்காக சீனா ஒரு தனியான நிர்வாகக் கட்டமைப்பையே கொண்டிருக்கின்றது - இதற்கென வருடந்தோறும் சீன ஜனாதிபதி ஸி-ஜின்பிங் ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களை ஒதுக்கிவருகின்றார். சீன அணுகுமுறைக்கு மாலைதீவின் அரசியல் நிலைமை ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும். மாலைதீவின் புதிய ஜனாதிபதி மூசி முற்றிலும் சீன சார்பு ஜனாதிபதியாகவே செயல்பட்டு வருகின்றார். இதனால் தெற்காசிய புவிசார் அரசியல் கொதி நிலையடைந்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் நோக்கினால் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் 2015 தேர்தலைவிடவும் முக்கியமானதாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை. ஆனால், இவ்வாறானதொரு தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் - எவ்வாறான அணுகுமுறையை கைக்கொள்ள வேண்டும் - தமிழ் மக்கள் எவ்வாறு தயார் செய்யப்பட வேண்டும்? இப்படியான கேள்விகளுக்கு தமிழ் கட்சிகள் எவற்றிடமும் எந்தப் பதிலும் இல்லை. வழமைபோல், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் பார்த்துக் கொள்ளலாம், என்னும் அணுகுமுறையிலேயே தமிழ் கட்சிகள் அமைதியாக இருக்கின்றன. இது தவறானதாகும். தமிழ்க் கட்சிகள், தங்களுடைய கடந்த கால தேர்தல் தீர்மானங்கள் தொடர்பில் திரும்பிப் பார்த்து அந்த அனுபவங்களிலிருந்தே புதிய தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்.

# மைலோ உதைபந்தாட்ட சம்பியன்ஸ் 2024: இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான வட மாகாண உதைப்பந்தாட்டப் போட்டிகள்

கல்வி அமைச்சின் மேற்பார்வையிலும் நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ வர்த்தக நாமத்தின் அனுசரணையிலும் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 10 மற்றும் 12 வயதுக்குட்பட்ட வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி நிகழ்வின் முதல் சுற்று 05 மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

இதில், இன்று சனிக்கிழமை மன்னார் மாவட்டத்திலும் எதிர்வரும் மார்ச் 02ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திலும் இதைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் 09ஆம் திகதி வவுனியா மாவட்டத்திலும் மார்ச் 16ஆம் கிளிநொச்சி மாவட்டத்திலும் எதிர்வரும் மார்ச் 22ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் நடைபெறவுள்ளன.




இந்த மாவட்ட மட்ட போட்டி களில் 05 மாவட்டங்களிலிருந்தும் 250 அணிகளும் 3,750 விளையாட்டு வீர, வீராங்கனைகளும் பங்குபற்றுகின்றனர். முதன்முறையாக, ஒரு மாகாணத்தில் இருந்து அதிக எண்ணிக்கையிலான அணிகள் மற்றும் வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். மாவட்ட மட்ட வெற்றியாளர்களாக இரு வயது பிரிவுகளில் இருந்தும் 16 ஆடவர்/மகளிர் அணிகள் தேர்ந்தெடுக்கப்படும்.

இதில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் தலா 4 அணிகள் உள்ளன. இந்த போட்டி நிகழ்வின் இறுதிச் சுற்றில் 80 அணிகளும் 1,200 விளையாட்டு வீர, வீராங்கனைகளும் பங்கேற்கவுள்ளனர். இந்தப் போட்டிகள் எதிர்வரும் மார்ச் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நடைபெறும். இந்தத் திட்டத்தின் மூலம் வட மாகாணத்தில் முதன்முதலாக உதை பந்தாட்ட விளையாட்டில் நுழையும் இந்த இரு வயதுப் பிரிவு வீர, வீராங்கனைகளின் உதைபந்தாட்ட விளையாட்டை விருத்தி செய்து, விளையாட்டு வீர, வீராங்கனை களின் திறமைகளை மேம்படுத்தும் வாய்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

திறமையான விளையாட்டு வீர, வீராங்கனைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆரம்ப நிலையிலேயே விளையாட்டு பயிற்சிகளை வழங்கி, மாவட்ட அணிகளை அமைத்து பயிற்சிகளை மேற்கொள்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த மாவட்ட அணிக்கு மாதத்துக்கு நான்கு நாட்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பாடசாலை சங்கத்தின் திறமையான பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி அளிக்கப் படுகிறது. இதனை கல்வி அமைச்சு மற்றும் வட மாகாண கல்வி திணைக்களத்தின் மேற்பார்வையுடன் இலங்கை பாடசாலை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தி வருவதுடன், நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ வர்த்தக நாமம் அனுசரணை வழங்குகின்றது.

பல தசாப்தங்களாக இலங்கைப் பாடசாலைகளில் அடிமட்ட விளையாட்டுக்களை அபிவிருத்தி செய்வதற்கும் விளையாட்டுகளில் பன்மைத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் நெஸ்லே மைலோ, ஊட்டச்சத்தின் மூலம் சிறுவர்களை முன்னேற்றும் நோக்குடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு அனுசரணை வழங்க முன்வந்துள்ளதாக இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் பிரதம செயலாளர் தெரிவித்துள்ளார்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பெப்ரவரி - 24 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 12
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பௌர்ணமி




**மேடம்** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**இடபம்** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்** கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**சிம்மம்** விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி** நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். ண்டாகும். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும்.

**துலாம்** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**விருட்சிகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும்.

**தனுசு** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**மகரம்** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்** கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மீனம்** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

# பா. ஜ. க. 33 சதவீத வாக்குகளை பாராளுமன்றத் தேர்தலில் பெறும்!

கோவை, பெப். 24

எதிர்வரும் மக்களவை தேர்தலில் தமிழகத்தில் பா. ஜ. கவின் வாக்கு 33 சதவீதமாக அதிகரிக்கும் என்று மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பா. ஜ. க. சார்பில் மாநில தலைவர் அண்ணாமலை பங்கேற்ற 'என் மண் என் மக்கள்' நடை பயணத்தின்போது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழகத்தில் மது விற்பனை மூலம் அரசுக்கு 50 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக பட்ஜெட்டில் அறிவித்துள்ளது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இது போன்ற அவல நிலையை காண முடியாது. என்னை லேகியம் விற்பவர் என அ. தி. மு. கவினர் விமர்சித்துள்ளனர். பெப்ரவரி 27ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் தமிழகத்தில் நிலவி வரும் குடும்ப ஆட்சி உள்ளிட்ட அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வாக அந்த லேகியம் அமையும்.

நதிகள் புனரமைப்பு உள்ளிட்ட தமிழக அரசு அறிவித்து வரும் திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்து அமல்படுத்தி வரும் திட்டங்கள் தான். தமிழகத்தில் பா. ஜ. க. 20 சதவீத வாக்கு சதவீதத்தை தாண்டி பல ஆண்டுகள் கடந்துவிட்டது. எதிர்வரும் தேர்தலில் 33 சதவீதமாக அதிகரிக்கும். எனவே, தமிழகத்தில் பா. ஜ. க. ஏற்கெனவே வளர்ந்து விட்டது - என்றார். (ஐ)

# கருணாநிதி நினைவிடம் நாளை மறுதினம் திறப்பு

சென்னை, பெப். 24

முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளன. இந்த நிகழ்ச்சியில் அனைத்து கட்சி உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு. க. ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனிடையே, வள்ளுவர் கோட்டம் 80 கோடி (இந்திய) ரூபாய் செலவில் புனரமைக்கப்படுகின்றது. இந்தப் பணிகள் வரும், 2025ஜூன் மாதம் பணிகளை முடிக்கவேண்டும். இருப்பினும் முன்கூட்டியே பணிகள் முடிக்கப்பட்டு முதல்வரால் திறக்கப்படும் என்று அமைச்சர் வேலு கூறினார்.

இதேவேளை, முதல்வர் மு. க. ஸ்டாலின், நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற, நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய தலைவர் கருணாநிதியின் நினைவிடம் அமைக்கும் பணி முடிந்துள்ளது. கருணாநிதி நினைவிடம் மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணாவின் நினைவிடமும் சீரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டுள்ளது. அண்ணா, கருணாநிதி நினைவிடங்கள் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இதை விழாவாக இல்லாமல், நிகழ்ச்சியாகவே நடத்த முடிவெடுத்துள்ளோம். அதனால், அழைப்பிதழ் அச்சிடவில்லை. அவையில் உள்ள ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, கூட்டணி கட்சி, தோழமை கட்சி என அனைத்து கட்சி உறுப்பினர்களும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும். அதில் பங்கேற்குமாறு தமிழக மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன் - என்றார். (ஐ)

# தமிழ்நாடு முழுவதும் 100 நிர்வாகிகள் கட்சியில் நியமிக்க நடிகர் விஜய் முடிவு!

சென்னை, பெப். 24

தமிழ்நாடு முழுவதும் 2 கோடி உறுப்பினர்கள் சேர்க்கையை மேற்கொள்வதற்காக 100 நிர்வாகிகளை நியமிக்க நடிகர் விஜய் முடிவு செய்துள்ளார் என்று தெரியவருகின்றது.

தமிழக வெற்றிக் கழகம் என்ற புதிய கட்சியை நடிகர் விஜய் ஆரம்பித்துள்ளார்.

இதனிடையே, மாநிலம் முழுதும், 2 கோடி உறுப்பினர்களை சேர்க்க விஜய் முடிவெடுத்துள்ளார். இதற்காக, கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் சேர்க்கையில், மாவட்ட தலைவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என, சமீபத்தில் நடந்த நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

முதற்கட்டமாக, பெண்கள் மற்றும் புதிய வாக்காளர்களை உறுப்பினர்களாக சேர்க்க திட்டமிடப்பட்டு உள்ளது. உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்வதற்காக, இதுவரை சிறப்பாக செயல்பட்டு மக்களிடம் நன்மதிப்பை பெற்றுள்ள 100 நிர்வாகிகளை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அ. தி. மு. கவுடனேயே தே. மு. தி. க. கூட்டணி?

சென்னை, பெப். 24

பாராளுமன்றத் தேர்தலில் அ. தி. மு. க. கூட்டணியில் தே. மு. தி. க. இடம் பெற வேண்டும் என பெரும்பாலான மாவட்ட செயலாளர்கள் பிரேமலதாவிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில் தமிழ்நாட்டில் கட்சிகளிடையே கூட்டணி குறித்த பேச்சு தீவிரமாக நடைபெற்று வருகிறது. முக்கிய கட்சிகளான தி. மு. க. மற்றும் அ. தி. மு. க. கட்சிகள் கூட்டணி குறித்த பேச்சை ஏற்கனவே தொடங்கிவிட்டன.

இதனிடையே மறைந்த விஜயகாந்த் கட்சியான தே. மு. தி. க. இந்த தேர்தலை எவ்வாறு கையாள போகிறது என கேள்விகள் இருந்த நிலையில் கூட்டணி குறித்த ஆலோசனையை தற்போதுள்ள தே. மு. தி. க. பொதுச்செயலாளரான பிரேமலதாவுக்கு கூட்டணியை முடிவு செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டது.

இந்நிலையில், பிரேமலதா விஜயகாந்த்தை அ. தி. மு. க. மூத்த நிர்வாகிகள் நேற்று சந்தித்துப் பேசினரெனத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த சந்திப்பு சென்னை சாலிகிராமத்தில் உள்ள விஜயகாந்த் இல்லத்தில் நடைபெற்றதாகவும், அதில் கூட்டணி மற்றும் தொகுதி பங்கீடு குறித்து பேச்சு நடந்ததாகவும் கூறப்படுகிறது.

தே. மு. தி. கவினர் தங்களுக்கு 10 தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என தெரிவித்த நிலையில் அ. தி. மு. க. தரப்பில் 5 தொகுதிகள் தே. மு. தி. கவுக்கு வழங்க உடன்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதனிடையே, பா. ஜ. கவும் தே. மு. தி. கவுடன் கூட்டணி அமைக்க கடந்த ஒரு வாரமாக பேச்சுக்கு முயற்சித்து வருகிறது என்று கூறப்படுகின்றது. (ஐ)

# இலங்கைப் பொருளாதாரத்துக்கு அமெ.தொடர்ந்து உதவி வழங்கும்

## அலி சப்ரியிடம் கூறினார் ரிச்சர்ட் வர்மா



**கொழும்பு, பெப். 24**

**இந்த நாட்டின் பொருளாதார செழுமைக்காக அமெரிக்க உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மா தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மா உள்ளிட்ட குழுவினர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இச்சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து, துணை இராஜாங்க செயலாளர் உள்ளிட்ட குழுவினர் ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது.

அத்துடன், இலங்கை எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க அமெரிக்கா வழங்கிய மனிதாபிமான மற்றும் அவசர உதவிகளை அமைச்சர் அலி சப்ரி பாராட்டியிருந்தார்.

மேலும் பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் ஆர்.வர்மா நேற்று காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஈ-சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!



கொழும்பு, பெப். 24

இணைய வழி ஊடாக இலத்திரனியல் சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்து விற்பனை செய்யும் வலையமைப்பை ஜா-எல கலால் பிரிவினர் சுற்றிவளைத்தனர்.

இதன்போது, 25 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர் பாணந்துறை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

30 இலட்சம் ரூபா பெறுமதியான ஈ -சிகரெட் கையிருப்பு இதன்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் அரசாங்கத்திற்கு 10 கோடி ரூபா வரி வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஜா-எல கலால் அத்தியட்சகர் பிரேமஸ் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இந்த ஈ - சிகரெட்டுக்களுக்கு இளைஞர் சமூகம் மற்றும் சிறுவர்கள் அதிகளவில் அடிமையாகி வருவதாகவும் இது ஆபத்தான நிலை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிகரெட்டை விட இது அதிக போதை ஏற்படுத்தக்கூடியது. ஈ-சிகரெட் புகைப்பதை உங்களால் கண்டுபிடிக்க கூட முடியாது. வெவ்வேறு வாசனைகள் வெளியேறுகின்றன. இது போன்ற வாசனை உங்கள் பிள்ளைகளிடம் இருந்து வந்தால், தயவுசெய்து கண்டுபிடிக்கவும். இந்த ஈ-சிகரெட்டுகள் வெவ்வேறு வழிகளில் தயாரிக்கப்படுகின்றன. சில சமயங்களில் கையில் கட்டப்படும் ஸ்மார்ட் கடிகாரத்தின் வடிவில் இருக்கும். தெளிவாக அடையாளம் காண முடியாத வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# 9 வயது சிறுமியை தாக்கி காயப்படுத்திய தாய் கைது!

கொழும்பு, பெப். 24

9 வயது சிறுமியை தாக்கி காயப்படுத்தியதாக கூறப்படும் தாய் ஒருவர் மின்னேரியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிரித்தல பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாவார்.

இவர் தனது கல்வியை பூர்த்தி செய்யாத காரணத்தினால் தனது பிள்ளைகளும் படிக்கக்கூடாது என நினைத்து 9 வயது சிறுமியை தாக்கி காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் முதுகுப் பகுதியில் முப்பதுக்கும் மேற்பட்ட தழும்புகள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைபேசி அழைப்பின் மூலம் கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் சிறுமியின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பெண் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த பெண்ணின் கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் சந்தேக நபர்கள் இருவரும் ஹிங்குராங்கொட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் சிறுமியை அநுராதபுரம் சிறுவர் காப்பகத்திற்கு அனுப்பி வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# 3 கோடி முட்டைகள் இறக்குமதிக்கு அனுமதி!

கொழும்பு, பெப். 24

பண்டிகைக் காலத்திற்காக இந்தியாவில் இருந்து மேலும் 3 கோடி முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் 6 கோடி முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அதன்படி 9 கோடி முட்டைகள் இறக்குமதி செய்யப்பவுள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# அமெ. பிரதி இராஜாங்க செயலர் ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு

கொழும்பு, பெப். 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் பிரதி இராஜாங்க செயலாளர் இதனபோது பாராட்டு தெரிவித்தார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் உட்பட இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளருக்கு விளக்கமளித்தார்.



உலக பாதுகாப்பு தொடர்பான விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், செங்கடலில் இடம்பெறும் கடற்படை நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு பிரதி இராஜாங்க செயலாளர் நன்றி தெரிவித்தார்.

ஹூதி கிளர்ச்சியாளர்கள் தொடர்பில் சவூதி அரேபியாவின் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவு தெரிவித்த ஜனாதிபதி, இந்து சமுத்திரத்தின் சுதந்திரமான கடற்பயணத்திற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிக்கும் எனவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளர் யூ.எல்.எம். ஜோஹர், சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அமெரிக்க பிரிவின் பணிப்பாளர் சதுர பெரேரா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# "இரவுநேரப் பொருளாதாரத்திற்கு மாறுவதால் நாட்டின் அந்நிய செலாவணியை உயர்த்தலாம்"

கொழும்பு, பெப். 24

இரவு நேரப் பொருளாதாரத்திற்கு மாறுவதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணியை சுமார் 70 வீதம் வரை அதிகரிக்க முடியும் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

அதற்காக சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரக் கூடிய இடங்கள் தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் திருத்தியமைத்து, தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் டயனா கமகே இவ்வாறு தெரிவித்தார்.

இரவுப் பொருளாதாரம் தொடர்பில் சில தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் உலகின் பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இரவு நேரப் பொருளாதாரம் முக்கிய பங்காற்றுவதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே,

"ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் இரவு நேரங்களில் பல்வேறு பொழுதுபோக்கு நடவடிக்கைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கான பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் இரவில் உணவகங்களைத் திறந்து வைப்பது உள்ளிட்ட இரவு நேரப் பொருளாதாரத்தை நாடுவதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணியை சுமார் 70% அதிகரிக்க முடியும். உலகின் பல நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கு இரவு நேரப் பொருளாதாரத்தின் பங்களிப்பை பயன்படுத்திக் கொள்கின்றன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி, நம் நாட்டு மக்களும் இரவு நேரங்களில் உணவகங்களுக்குச் செல்வது உள்ளிட்ட பல்வேறு கேளிக்கைகளில் ஈடுபடுவதையே விரும்புவது வழக்கம். இதன்மூலம் விசேடமாக மதுவரி வருமானத்தையும் அதிகரிக்க அரசாங்கத்திற்கு வாய்ப்பளிக்கிறது. ஒரு நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கும், நாட்டின் நிலையான வளர்ச்சியைப் பேணுவதற்கும், அரச வருமானத்தை அதிகரிப்பது அவசியம்.

இரவு நேரப் பொருளாதாரம் தொடர்பில் சில தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். ஆனால் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுதுபோக்கிற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும். குறிப்பாக கடலோரப் பகுதிகளிலும், கொழும்பு போன்ற நகர்ப்புறப் பகுதிகளிலும் முக்கிய சுற்றுலாத் தலங்கள் உள்ளன. எனவே, இது போன்ற இடங்கள் தொடர்பான சட்ட, விதிமுறைகளை திருத்தம் செய்து, தேவையான வசதிகளை செய்து தர வேண்டும்-என்றார். (அ)

# உண்மை, நல்லிணக்க குழுவுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை!

## சுவிற்ஸர்லாந்து அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

**அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

கடந்த ஆண்டு டிசெம்பர் மாத இறுதியில் நடைபெற்ற சுவிட்ஸர்லாந்து நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றிய அந் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் பெபியன் மொலினா, சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் இலங்கையுடன் பேணிவரும் தொடர்புகள் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார்.

விசேடமாக இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கும், இமயமலை பிரகடனத்துக்கும் சுவிட்ஸர்லாந்து வழங்கிய ஆதரவு மற்றும் தமிழர் விவகாரத்தில் சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு இவ்வருட அமர் வில் சுவிட்ஸர்லாந்து அரசாங் கம் பதிலளிக்கவேண்டியிருந் தது.

அதற்கிணங்க, இவற்றுக்கு பதிலளித்த சுவிட்ஸர்லாந்து அரசாங்கம், இலங்கையில் சமாதான கொள்கைத்திட்டத்தை சுவிட்ஸர்லாந்து நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தன்னிச்சையாகத் தடுத்துவைக்கப்பட்டிருப்போர் மற்றும் சிறைச்சாலைகளில் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டோருக்கு அவசியமான சட்ட உதவிகளை வழங்குவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுவருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டு இயங்கிவரும் அமைப்புக்களுடனும் சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் இணைந்து பணியாற்றி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு சுவிட்ஸர்லாந்து ஆதரவளித்தது.

இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருப்பதுடன், பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் முறையற்ற பிரயோகத்தையும் சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் கண்டித்திருக்கின்றது.

இலங்கை அரசாங்கம் உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதை சுவிட்ஸர்லாந்து அவதானித்துள்ளது.

எனினும், இந்த ஆணைக்குழுவுக்கு ஆதரவளிக்கும் உத்தேசம் சுவிட்சர்லாந்து அரசாங்கத்துக்கு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ஜப்பான் தூதரகம் மற்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் ஓரங்கமாக நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும், நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குமான ஆலோசனைத்திட்டம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சுவிட்ஸர்லாந்து தூதரகத்தினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

அதேபோன்று கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து புகலிடக்கோரிக்கைகளும் ஒவ்வொரு விவகாரங்களாகப் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன. கடந்த ஆண்டு 61 பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதுடன், 21 பேர் தமது சுயவிருப்பின்பேரில் சுவிட்ஸர்லாந்தைவிட்டு வெளியேறினர் என்று அப்பதிலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# மணல் அகழ்வு பணிக்கு எதிராக போராட்டத்தில் இறங்கிய மக்கள்

மன்னார், பெப். 24

தலைமன்னார் இறங்குதுறை பகுதியில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வுப் பணிக்கு அப்பகுதி மக்களால் நேற்று முன்தினம எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

தலைமன்னார் இறங்கு துறை, தலைமன்னார் ஊர் மனை, தலைமன்னார் ஸ்டேஷன் பகுதி மக்கள் ஒன்றிணைந்தே இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

எவ்வித அனுமதி இன்றியும், மக்களுக்கு எவ்வித அறிவுறுத்தல்கள் வழங்கப்படாமலும் தான் மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக குறித்த குழுவினர் வருகைத் தந்துள்ளனர் என பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அப்பகுதிக்கு வருகை தந்த மணல் பரிசோதனை குழுவினர் தாங்கள் ஒரு ஒப்பந்த நிறுவனம் என்று தெரிவித்துள்ளதோடு, எதிர்ப்பினை வெளியிட்ட பொது மக்களுக்கும் தமது ஒப்பந்தத்தினை காண்பித்துள்ளனர்.

இந்தச்சம்பவமானது அங்கு பெரும் பதற்றமான சூழலை ஏற்படுத்திய நிலையில், தலைமன்னார் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வருகைத் தந்து நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முற்பட்டனர்.

எனினும், மக்கள் இதற்கு கடுமையான எதிர்ப்பினை வெளியிட்ட நிலையில், மணல் அகழ்விற்காக வருகைத் தந்திருந்த குழுவினர் அங்கிருந்து வெளியேறினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# முதலில் பொதுத் தேர்தலை நடத்த மொட்டு கோரிக்கை

கொழும்பு, பெப். 24

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேர்தலுக்கான மொட்டு கட்சியின் ஏற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் கூறியவை வருமாறு,

ஜனாதிபதி தேர்தல் நடந்தாலும், பொதுத்தேர்தல் நடந்தாலும் எதிர்கொள்வதற்கு நாம் தயார். யார் என்ன சொன்னாலும் இலங்கையில் உள்ள பலமான கட்சி எமது கட்சி என்பதே உண்மை. தேர்தலை எதிர்கொள்வதற்கான ஏற்பாட்டு பணிகள் இடம்பெற்றுவருகின்றனர். நாளை தேர்தல் வைத்தாலும் நாம் தயார். முதலில் பொதுத்தேர்தலை நடத்தினால் நல்லது. இது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

பஸில் ராஜபக்ச இம்மாதம் நாட்டுக்கு வருவார். அவர்போல் அரசியல் வியூகம் வகுத்து செயல்படக்கூடிய தலைவர் கிடையாது. பஸில் வந்ததும் தேர்தல் பற்றி முடிவெடுக்கப்படும் - என்றார்.

# இலங்கையின் மூன்று விமான நிலையங்கள் அதானி குழுமத்துக்கு வழங்கப்பட்டனவா?

கொழும்பு, பெப். 24

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் உட்பட மூன்று இலங்கை விமான நிலையங்களின் நிர்வாகத்தை அதானி குழுமத்திடம் இலங்கை ஒப்படைக்கவுள்ளதாக கூறப்படும் சமீபத்திய செய்திகள் தவறானவை என விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர அவ்வாறான கலந்துரையாடல் எதுவும் இடம்பெறவில்லை என தனக்கு அறிவித்துள்ளதாக அந்நிறுவனத்தின் தலைவர் அதுல கல்கெட்டிய கூறியுள்ளார்.

கட்டுநாயக்க, இரத்மலானை மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையங்களை நிர்வகிப்பதற்கான அதிகாரத்தை அதானி குழுமத்திற்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவை மேற்கோள் காட்டி, இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

எவ்வாறாயினும் மத்தள விமான நிலையத்தால் பாரிய இழப்பை சந்தித்து வருவதால் அதனையும் யாழ் விமான நிலையத்தின் அபிவிருத்திகளுக்காகவுமே ஏனைய சாத்தியமான தரப்பினரின் பங்களிப்பைப் பெறுவதற்கு பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அதுல கல்கெட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் ஏல செயல்முறைகளுக்கு ஏற்ப நடைபெறும் என்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் நிர்வாகத்தை வேறொரு தரப்பினருக்கு வழங்குவது குறித்து எவ்வித கலந்துரையாடலும் நடைபெறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# எட்கா உடன்படிக்கைக்கு சரத் வீரசேகர எதிர்ப்பு!



கொழும்பு, பெப். 24

“இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் கைச்சாத்திடப்படவுள்ள எட்கா உடன்படிக்கைக்கு முழு எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.” - என்று ஆளுங் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

“நாடு இன்று ஓரளவு ஸ்தீரமான நிலையில் உள்ளது. இதற்காக தற்போதைய ஜனாதிபதிக்கு நன்றிகளை கூறிக்கொள்கின்றேன். நாடு முன்னேற வேண்டுமெனில் முதலில் நாட்டு மக்கள் சட்டத்தை மதிக்க வேண்டும். காட்டு சட்டம் நாட்டை ஆள முடியாது. பொருளாதார சவாலை எதிர்கொள்ள ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை மதிக்கின்றோம். ஆனால் மெல்லென இந்திய மயமாக்களுக்கு உள்ளானால் அதற்கு நாம் முழு எதிர்ப்பு.


இந்திய ரூபா எமது நாட்டில் பயன்பாட்டுக்கு வந்தால் அதற்கு நாம் எதிர்ப்பு. இலங்கை இந்தியாவின் 29 ஆவது மாநிலமாவதற்கும் நாம் எதிர்ப்பு. விமான நிலையங்களின் அதிகாரம் இந்திய நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதற்கும் நாம் எதிர்ப்பு. கேந்திர முக்கியத்துவமிக்க இடங்கள் வெளிநாட்டவர் கைகளுக்கு செல்வது நாட்டின் இறைமையுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திட முற்பட்டால் அதனையும் நாம் எதிர்ப்போம். எட்கா, சீபா உடன்படிக்கைகளுக்கு எமது நாட்டு மக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இந்தியர்கள் எமது நாட்டுக்கு வந்து தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கும் இந்த உடன்படிக்கை எமது நாட்டுக்கு தாக்கம் ஏற்படுத்தக்கூடியது.

இந்தியாவில் 44 மில்லியன் பேருக்கு வேலையில்லை. அதே போல தொழில் இல்லாமல் 2 லட்சம் வைத்தியர்கள் உள்ளனர். இந்தியாவில் வருடாந்தம் 15 லட்சம் பொறியியலாளர்கள் உருவாகின்றனர். எமது நாட்டில் 2 ஆயிரம் பேர்வரைதான் பொறியிலாளர்களாக உருவாகின்றனர். எனவே, தொழில் சந்தையை இந்தியா ஆக்கிரமிக்கலாம். இதனால் எமது இளைஞர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.” - என்றார்.

(அ)

# தோழர் ஆர்.ஆர். அவர்களின்
# வீரவணக்க நிகழ்வுகள்







## வேலாயுதம் நல்லநாதர்

### ( தோழர் இராகவன் அல்லது ஆர்.ஆர். )

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE) இயக்கத்தின் மூத்த தளபதிகளுள் ஒருவரும், அதன் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (DPLF) சிரேஷ்ட உபதலைவரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் (DTNA) செயலாளருமான தோழர் இராகவன் அல்லது ஆர்.ஆர் (வேலாயுதம் நல்லநாதர்) கடந்த 22.02.2024 வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இணைந்திருந்து – தமிழ் மக்களின் விடுதலைக்கான பயணத்தில் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை முழுமையாக அர்ப்பணித்த ஒரு மூத்த போராளியே ஆர்.ஆர். ஆவார்.

தோழர் ஆர்.ஆர். அவர்களின் வித்துடலுக்கான வணக்க நிகழ்வுகள் – 16, ஹேக் வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள கட்சியின் கொழும்பு அலுவலகத்தில் இன்று (24.02.2024) சனிக்கிழமை காலை 9:00 மணி முதல் 12:00 மணி வரையிலும், அதனைத் தொடர்ந்து, வவுனியா கோவில் குளத்தில் அமைந்துள்ள உமா மகேஸ்வரன் நினைவில்லத்தில் நாளை (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி தொடக்கமும் நடைபெறும்.

பின்னர், முற்பகல் 11 மணிக்கு இறுதி நிகழ்வுகள் நடைபெற்று தோழர் ஆர்.ஆர். அவர்களின் வித்துடல் வவுனியா கோவில்குளத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)**
**ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF)**
**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி (DTNA)**

23.02.2024

# காட்டு யானைகளின் தாக்கங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்வு

காரைதீவு, பெப். 24

**காரைதீவு பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்கங்களினால் பயிர்கள், சொத்துக்கள், உடைமைகள் மற்றும் தொழில் நிலையங்கள் போன்றவற்றில் ஏற்படும் பாதிப்புகளை குறைத்தல் மற்றும் காயமடைதல், உயிராபத்துக்கள் ஏற்படுவதை தடுப்பதற்கான முன்னாயத்தத் திட்டத்தினை வெற்றிகரமான தாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான கலந்துரையாடல் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.**

இக்கலந்துரையாடலில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம். பார்த்திபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச சபை செயலாளர், வன ஜீவராசிகள் திணைக்களத்தின் வளத்தாப்பிட்டி அலுவலக பொறுப்பதிகாரி, நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், காரைதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ இளைஞர் குழுவின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கார்மேல் பற்றிமா கால்கோள் விழா



காரைதீவு, பெப். 24

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் தரம் 1 மாணவர்களை உள்ளீர்க்கும் கால்கோள் விழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ச.இ.றெஜினோல்ட் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்எச்எம். ஜாபீர் கலந்து சிறப்பித்தார்.

மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு உள்ளிட்ட பல நிகழ்வுகள் மேடையேறின. (அ)

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலை வித்தியாரம்ப விழா



அம்பாறை, பெப். 24

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா நேற்று முன் தினம் கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எம்.ஐ. எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் சிஹாப் ஆகில், இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எம்.என்.எப். ரக்ஸா ஆஸ்மி, பாடசாலையின் பழைய மாணவரும் அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளருமான எம்.ஐ.எம்.ரியாஸ், ஆரம்ப கல்வி வளவாளர் எஸ்.எம்.எம். அன்ஸார் ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தேசியக்கொடி ஏற்றப்பட்டதோடு, தரம் இரண்டு மாணவர்களால் புதிய மாணவர்கள் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர்.

பிரதி அதிபர், உதவி அதிபர் உட்பட பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் முதலாம் தரத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள புதிய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# இஸ்லாமாபாத் முஸ்லிம் ம.வியில் வித்தியாரம்ப விழா

அம்பாறை, பெப். 24

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2024ஆம் கல்வி ஆண்டுக்காக புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களுக்கான வித்தியாரம்ப விழா நேற்று முன்தினம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

பகுதித் தலைவர் டி.கே.எம். மௌஸீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம் றிசாத் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதிகளாக கல்முனை சபா கோல்ட்ஹவுஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் எப்.எம். சகி, “டே நைட்” பென்சிஹவுஸ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ. எம். சிறாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தரம் இரண்டு மாணவர்களினால் புதிய மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் அதிதிகளால் அம் மாணவர்களுக்கு கிரீடம் அணிவிக்கப்பட்டதுடன் இனிப்புப் பொதிகளும் வழங்கி, ஏடு தொடக்கி வைத்தும் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் வருகை தந்த கௌரவ அதிதிகளினால் புதிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு, பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ரீ.ஏ. மனாப் மற்றும் பாடசாலையின் பகுதித் தலைவர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (அ)

# கால்நடை வளர்ப்போருக்கு நிதியுதவி



மட்டக்களப்பு, பெப். 24

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் கால்நடைகளை இழந்து பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கான நிதியுதவியை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், ஆளுநர் செயலாளர் எல்.பி. மதநாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்துக்கொண்டனர். (அ)

# தமிழ் இலக்கிய, இலக்கண செயலமர்வு

அம்பாறை, பெப். 24

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியை உள்ளடக்கிய தமிழ் பேசும் தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கான செயலமர்வொன்று பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி வழிகாட்டுதளுக்கிணங்க இடம் பெற்ற குறித்த செயலமர்வை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச மட்ட இலக்கியப் போட்டியினை முன்னிட்டு, தமிழ்மொழி மூலமான மாணவர்களுக்கான தமிழ் இலக்கண இலக்கியம் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.மாணவர்களின் மொழி ஆளுமை ,தமிழ் இலக்கண உச்சரிப்பு,கட்டுரை ஆக்கம் எழுதுதல் உள்ளிட்ட பல திறன்களை வளர்க்கவும் இச் செயலமர்வின் மூலமான வெளிப்பாடாக எதிர்பார்க்கப்படுகிறது.



இதில் வளவாளராக தமிழ் கற்கைகள் துறை மாணவன், கிழக்குப்பல்கலைக்கழகம் தி. முகிலன் அவர்கள் கலந்து கொண்டார்.

இச் செயலமர்வின் ஒருங்கிணைப்பாளராக திருமதி பாக்கியராஜா மேனகா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தம்பலகாமம்) உட்பட மாணவ மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# 3ஆம் உலகப்போர் மூளும் அபாயநிலை?

## பாலிஸ்டிக் ஏவுகணை ரஷ்யாவிற்கு வழங்கும் ஈரான்



தெஹ்ரான், பெப். 24

ஈரான், ரஷ்யாவிற்கு சக்தி வாய்ந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை வழங்கவுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஈரான் ஏவுகணை உள்ளிட்ட 400 மேற்பட்ட அதிபயங்கர ஆயுதங்களை வழங்கவுள்ளது. இந்த ஏவுகணைகள் 300 முதல் 700 கிலோமீற்றர் வரையில் தொலைவிலுள்ள இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டவை.

கடந்த ஆண்டின் இறுதியில் தெஹ்ரான் மற்றும் மாஸ்கோவில் ஈரான் மற்றும் ரஷ்ய இராணுவம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இடையே இடம்பெற்ற கலந்துரையாடல்களின் போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் பின்னர் இவ்வாண்டு ஆரம்பம் முதலே ஏவுகணை ஏற்றுமதி ஆரம்பமாகியது என ஈரானிய இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கருபியன் கடல் வழியாகவும், விமானம் மூலமாகவும் ஏவுகணைகள் ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டதாகவும் ஈரான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஐ.நா பாதுகாப்புச் சபை ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணை ஏற்றுமதிகளுக்கு ஈரானுக்கு எதிராக தடை விதித்திருந்தது. இந்த தடையானது கடந்த வருடம் அக்டோபரில் நீக்கப்பட்டது. இருப்பினும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன ஈரானின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை திட்டத்தின் மீதான தடைகளைத் தக்கவைத்துக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

உக்ரைனுக்கு எதிரான மொஸ்கோவின் போரில் பயன்படுத்துவதற்காக வடகொரியா சமீபத்தில் ரஷ்யாவிற்கு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் ஏவுகருவிகளை வழங்கியதாக வெள்ளை மாளிகை குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி தெரிவிக்கையில், வட கொரியாவிலிருந்து ஏற்கனவே பெறப்பட்ட ஏவுகணைகளுக்கு மேலதிகமாக, ஈரானிடம் இருந்து குறுகிய தூர பாலிஸ்டிக் ஆயுதங்களை ரஷ்யா கொள்வனவு செய்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அறிய முடிகின்றது" என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது இந்த ஏவுகணை விநியோகம் இடம்பெறுவதை ஈரான் மற்றும் ரஷ்ய நாடுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

(அ)

# இஸ்ரேலின் இன அழிப்புக்கு அமெரிக்கா பச்சை விளக்கா?

## போர்நிறுத்த தீர்மானத்தை வீட்டோ செய்தது




நியூயோர்க், பெப். 24

செவ்வாயன்று காசாவில் உடனடி போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கும் ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தை அமெரிக்கா வீட்டோ செய்தது. இஸ்ரேலுக்கான ஆதரவைக் குறைக்க வேண்டுமென ஜனாதிபதி ஜோ பிடன் அதிக அழுத்தத்தை எதிர்கொண்டுள்ள நிலையில், அமெரிக்காவின் இந்த முடிவு நட்பு நாடுகளிடமிருந்து கடுமையான விமர்சனங்களை ஈர்த்தது.

ஹமாஸ் அமெரிக்க முடிவைக் கண்டனம் செய்தது, இது இஸ்ரேலுக்கு "அதிக படுகொலைகளை" நடத்த "பச்சை விளக்கு" கொடுப்பதாகக் கூறியது.

"இந்த வீட்டோ இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு உதவுகிறது, ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கான சர்வதேச முயற்சிகளைத் தடுக்கிறது, மேலும் நமது மக்களின் துன்பத்தை அதிகரிக்கிறது" என்று ஹமாஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. "அமெரிக்க நிலைப்பாடு ஆக்கிரமிப்பு இன்னும் படுகொலைகளை செய்வதற்கு பச்சை விளக்கு."

வாஷிங்டன் அதன் சொந்த, மாற்று வரைவுத் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு முன்னதாக வெளியிட்டது. கடந்த கால அமெரிக்க முயற்சிகளைப் போலன்றி, அந்தப் பதிப்பில் "போர்நிறுத்தம்" என்ற வார்த்தை இடம்பெற்றுள்ளது - ஆனால் அது உடனடியாகச் செயல்படுத்தப்படுவதற்கான அழைப்பு எதுவும் இல்லை.

அல்ஜீரியா மூன்று வாரங்களாக வேலை செய்து கொண்டிருந்த செவ்வாயன்று தீர்மானம், "அனைத்து தரப்பினராலும் மதிக்கப்பட வேண்டிய உடனடி மனிதாபிமான போர்நிறுத்தத்தை" கோரியது.

வாஷிங்டனின் வீட்டோ "முற்றிலும் பொறுப்பற்றது மற்றும் ஆபத்தானது" என்று ஐ.நாவுக்கான பாலஸ்தீனிய பிரதிநிதி ரியாத் மன்சூர் கூறினார்.

ஆனால் ஐ.நா.வுக்கான வாஷிங்டனின் தூதர் லிண்டா தாமஸ்-கிரீன்ஃபீல்ட் செவ்வாயன்று வாக்கெடுப்பு நடத்துவது "பொறுப்பற்றது" என்று கூறினார்.

காஸாவில் பணயக்கைதிகளை விடுவிக்கும் பேச்சுக்களை குறிப்பிடுகையில், "உணர்வு மிக்க பேச்சுவார்த்தைகளை ஆபத்தில் ஆழ்த்தும் ஒரு தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்க முடியாது," என்று அவர் கூறினார்.

இந்த தீர்மானத்தை வீட்டோ செய்யும் அமெரிக்காவின் முடிவை - இஸ்ரேலுக்கான உறுதியான அமெரிக்க ஆதரவை நிராகரித்த சீனா மற்றும் ரஷ்யா மட்டுமல்லாமல், பிரான்ஸ், மோல்டா மற்றும் ஸ்லோவேனியா உள்ளிட்ட அமெரிக்க நட்பு நாடுகள் கூட கடுமையான விமர்சித்துள்ளன. (அ)

# வெனிசுலாவில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 15 பேர் பலி!



வெனிசுலாவில் புல்லா லோகா என்ற இடத்தில் அமைந்துள்ள சட்டவிரோத தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த திறந்தவெளிச் சுரங்கத்தில் தொழிலாளர்கள் பணி புரிந்து கொண்டிருந்த வேளையிலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில் சுரங்கம் இடிந்து விழுந்ததில் ஏராளமானோர் மண்ணுக்குள் புதையுண்டுள்ளனர் எனவும், அவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும், இதுவரை 15 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அமெரிக்காவில் மருத்துவ ஆராய்ச்சிக்காக 200 ஏக்கரில் 30,000 குரங்குகளுக்கு நகரம்

நியூயோர்க், பெப். 24

அமெரிக்காவைச் சேர்ந்த மருந்து உற்பத்தி நிறுவனமான 'சேபர் ஹியூமன் மெடிசின்ஸ்' தொடர்ந்து மருந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இந் நிறுவனம் ஜார்ஜியா மாகாணத்தின் பெய்ன்பிரிட்ஜ் நகருக்கு அருகே சுமார் 30,000 குரங்குகள் வசிக்க 200 ஏக்கரில் ஒரு குட்டி நகரை உருவாக்க திட்டமிட்டுள்ளது.

இங்கு இனப்பெருக்கம் செய்யப்பட்டு வளர்க்கப்படும் நீண்டவால் குரங்குகளை பல்கலைக் கழகங்கள் மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு மருத்துவ ஆய்வுக்கு அனுப்பி வைக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து அப்பகுதிவாசி டேவிட் பார்பர் கூறும் போது, "பெய்ன்பிரிட்ஜ் நகரில் சுமார் 14 ஆயிரம் மக்கள் வசிக்கின்றனர். இந்த நகரில் 30 ஆயிரம் குரங்குகளை வளர்த்தால் எங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். எனவே இந்த திட்டத்தை உடனடியாக கைவிட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார். இதுபோல, மருத்துவ ஆராய்ச்சிக்காக குரங்குகளை ஓரிடத்தில் அடைத்து வைத்து இனப்பெருக்கம் செய்வது கொடூரமானது என விலங்குகள் நல அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# பாதுகாப்புக் கவலைகளுக்கு மத்தியில் இந்திய பெருங்கடல்

## மாலைத்தீவில் நங்கூரமிடப்பட்ட சீன ஆய்வுக் கப்பல்




புதுடில்லி, பெப். 24

இந்தியாவின் பலத்த கவலைகளுக்கு மத்தியில் சீனாவின் சர்ச்சைக்குரிய ஆய்வுக் கப்பலொன்று வியாழன் மாலைதீவை சென்றடைந்துள்ளது.

சீனாவின் இயற்கை வள அமைச்சுக்கு அறிக்கை அளிக்கும் ஒரு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சொந்தமான "சியாங் யாங் ஹாங் 3" என்ற கப்பலானது கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக பயணம் மேற்கொண்டு மலைத்தீவு தலைநகரான மலேயில் நங்கூரமிடப்பட்டுள்ளது.

கப்பலின் வருகைக்கு முன்னர் அது இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கையின் பிரத்யேக பொருளாதார மண்டலங்களுக்கு வெளியே மூன்று வாரங்களுக்கும் மேலாக நீர்நிலைகளை ஆய்வு செய்ததாக கப்பல் கண்காணிப்பு தரவுகள் வெளிக்காட்டுவதாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

விஞ்ஞான புரிதலுக்கு பயனளிக்கும் வகையில் இந்த கப்பல் பயணம் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ள சீனா, கப்பல் இந்தியப் பெருங்கடலில் அறிவியல் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் என்றும் கூறியது.

குறித்த கப்பலானது சீனாவின் இராணுவத்தைச் சேர்ந்ததாக இல்லாத நிலையிலும், அது இந்திய பெருங்கடலில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்வது குறித்து இந்தியா கவலை வெளியிட்டுள்ளது.

கப்பலின் மாலைதீவு பயணம் குறித்து கருத்து தெரிவித்துள்ள இந்திய பாதுகாப்பு அதிகாரியொருவர், சியாங் யாங் ஹாங் 3 கப்பல் சேகரிக்கும் தரவு பொது மக்கள் மற்றும் இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம் என்று கூறினார்.

குறித்த கப்பல் இந்தியப் பெருங்கடலுக்கு பலமுறை பயணம் மேற்கொண்டுள்ளது.

இது 2021 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் உள்ள சுந்தா ஜலசந்தி வழியாக பயணித்து, இந்தோனேசிய அதிகாரிகளை அச்சுறுத்தியது.

சியாங் யாங் ஹாங் 03 கப்பலின் வருகை ஜனவரி மாதம் மாலைத்தீவு ஜனாதிபதி மொஹமட் முய்ஸுவின் சீனாவிற்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து இரு நாட்டு உறவுகளையும் வலுப்படுத்தியுள்ளது.

எனினும் அண்மைக்காலமாக விரிசலடைந்து வரும் இந்தியா மற்றும் மாலைத்தீவு இடையிலான உறவுகளுக்கு இது மற்றுமோர் அடியாக பார்க்கப்படுகிறது.

கப்பல் அதன் நீரில் எந்த ஆராய்ச்சியும் செய்யாது, பணியாளர்கள் சுழற்சி மற்றும் பொருட்களை நிரப்புவதற்கு மட்டுமே நிறுத்தப்படும் என்று மாலைதீவு கூறியுள்ளது.

(அ)

# கொழும்பு, திருமலையில் அதிவெப்பம் அடுத்த சில மாதங்களுக்கு நீடிக்கும்!

- சிறுவர் தொடர்பில் அவதானம் தேவை
- தோல் நோய்கள் ஏற்படும் அபாய நிலை!

கொழும்பு, பெப். 24

**கொழும்பு, திருகோணமலை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் வெப்பம் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தை விட அதிகரிக்கும். இந்த நிலைமை எதிர் வரும் சில மாதங்களுக்கு தொடரும் எனவும் வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

கொழும்பு, திருகோணமலை, கம்பஹா, புத்தளம், குருநாகல், அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய 8 மாவட்டங்களுக்கே இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் மனித உடலால் தாங்கிக் கொள்ளக்கூடிய வெப்பத்தை விட அதிக உஷ்ணம் எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னெச்சரிக்கை பிரிவுக்கான பிரதிப்பணிப்பாளர் அஜித் விஜயமன்னே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாடளாவிய ரீதியில் காற்றின் அளவு குறைந்துள்ளமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. வெப்பநிலை மேலும் சில மாதங்களுக்கு தொடரும். அதிக வெப்பத்திலிருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களையும் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அதற்கமைவாக அதிகளவு நீரை அருந்துதல், அதிக சோர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடா திருத்தல், வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணிதல் மற்றும் நிழலான இடங்களில் தங்கியிருத்தல் போன்ற அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, வெப்பமான காலநிலை காரணமாக எமது உடலில் இருந்து அதிகளவிலான வியர்வை வெளியேறுவதால் களைப்பு ஏற்படலாம் எனவும் இதனை தவிர்த்துக் கொள்ள நீர், இளநீர் மற்றும் கஞ்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சிறுவர் நோய்கள் தொடர்பான விசேட மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், வெப்பமான காலநிலை காரணமாக எமது உடலில் இருந்து அதிகளவிலான வியர்வை வெளியேறும். இதன் போது வியர்வையுடன் நீர் மற்றும் உப்பும் வெளியேறுகிறது. இதன்போது எமக்கு களைப்பு ஏற்படலாம். அதோடு சோடியம் குறைபாடும் ஏற்படுகிறது. இதனால் மயக்கம் ஏற்படலாம். உடல் வலி, தலைவலி, வாந்தி, நித்திரை மயக்கம், நித்திரை இன்மை உள்ளிட்ட பிரச்சனைகள் ஏற்படலாம். எனவே இதனை தவிர்த்துக் கொள்ள நீர், இளநீர், கஞ்சி மற்றும் ஜீவனி எடுத்துக் கொள்ளலாம்.

மேலும், தோல் சார்ந்த பிரச்னைகள் ஏற்படலாம். எனவே சிறுவர்களை காலை மற்றும் மாலை வேளைகளில் நீரில் நனைக்க வேண்டும் - என்றார்.

# கொலை முயற்சி குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, பெப். 24

கொழும்பு - முகத்துவாரம் பகுதியில் ஒருவரை சுட்டுக் கொல்ல முயன்றனர் என்ற சந்தேகத்தில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த மாதம் 16 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் நபரொருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்துக்கு உதவினரென 16 மற்றும் 21 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொழும்பு 15, பெர்குசன் வீதியிலும் சேதவத்தை பிரதேசத்திலும் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான இருவரும் கொழும்பு - 15 இல் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த கொலை முயற்சி தொடர்பான மேலதிக விசாரணைகளை முகத்துவாரம் பொலிஸார் மற்றும் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# யுக்திய நடவடிக்கை 729 பேர் கைதாகினர்!

கொழும்பு, பெப். 24

நாடளாவிய ரீதியில் நேற்று வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் யுக்திய நடவடிக்கையில் 729 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 595 சந்தேக நபர்களும் தேடப்படுவோர் பட்டியலில் இருந்த 134 சந்தேக நபர்களும் கைதானவர்களில் அடங்குவர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யப்படுகிறார். இருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# தேசிய அடையாள அட்டையிலும் இனி 'ரின்' இலக்க பயன்பாடு!

யோசனை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு

கொழும்பு, பெப். 24

வரிப் பதிவில் 'ரின்' இலக்கம் வழங்கும் யோசனையை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை வழங்க ரின் இலக்கத்தை பயன்படுத்துமாறு பரிந்துரைத்து அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான பிரேரணை தயாரிக்கப்பட்டு வருவ



தாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதற்காக 6 நிறுவனங்களிடம் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளதாகவும் இதுவரை 4 நிறுவனங்கள் பரிந்துரைகளை வழங்கியுள்ளன. மேலும் இரண்டு நிறுவனங்களின் பரிந்துரைகள் பெறப்படவுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார். (ஐ)

# திட்டமிட்ட விபத்தின்மூலம் ஒருவரை கொன்றவர் கைது!

கொழும்பு, பெப். 24

காரில் சென்றவருக்கும் மோட்டார் சைக்கிளில் சென்றவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து மோட்டார் சைக்கிளில் சென்றவரை தனது காரால் வேண்டுமென்றே மோதிக் கொன்றவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - தெகிவளை - கடவட வீதியில் கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், கைதானவர் அதே இடத்தை சேர்ந்த பொறியியலாளர் என்று அறிய வருகின்றது.

உயிரிழந்தவர் மொறட்டுவை - கட்டுபெத்தை- பெரேரா மாவத்தையைச் சேர்ந்த டி. ரஞ்சித் (52) என்பவராவார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் தேங்காய் எண்ணெய் போத்தல்களை விநியோகிக்கும் நிறுவனமொன்றில் பணியாற்றி வருகின்றார்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

கடந்த புதன்கிழமை காலை பொறியியலாளரான 30 வயது நபர் இளம் பெண் ஒருவருடன் குறுகலான வீதியான கடவட தெருவில் மிகமெதுவாக செலுத்திச் சென்றுள்ளார்.

அப்போது, மோட்டார் சைக்கிளில் சென்றவர் காரை முந்திச் சென்றார் என்றும் இதன் போது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன் பின்னர், மோட்டார் சைக்கிளின் பின்னால் வந்த கார் வேண்டுமென்றே மோட்டார் சைக்கிளை மோதியது. இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்தார்.

களுபோவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் உயிரிழந்தார். இந்த நிலையில், காரை செலுத்திய பொறியிலாளரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். (ஐ)

# மதிலுடன் மோதுண்டு பட்டா வாகனம் விபத்து

வாகன சாரதி காயம்


யாழ்ப்பாணம், பெப். 24

பொச்சு மட்டைகளை ஏற்றி வந்த பட்டா வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மதிலை உடைத்து விபத்துக்கு உள்ளானது.

இந்த சம்பவம் யாழ்.சாவகச்சேரி நுணாவில் ஏ-9 வீதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது. இதில், வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ளார்.

சாவகச்சேரியிலிருந்து பொச்சு மட்டைகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பட்டா வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

சம்பவம் தொடர்பான மேல




திக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சிறையிலிருக்கும் கணவருக்கு குழந்தையுடன் ஹெரோயினையும் கொண்டு சென்ற மனைவி

கொழும்பு, பெப். 24

சிறையிலுள்ள தனது கணவருக்கு ஹெரோயின் போதைப்பொருளைக் கொடுப்பதற்கு 7 மாத ஆண் குழந்தையுடன் சென்ற பெண்ணை களுத்துறை வடக்கு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர் அணிந்திருந்த காற்சட்டையில் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து வைத்திருப்பதை அவதானித்த சிறைச்சாலை அதிகாரிகள் பெண்ணை கைது செய்ததுடன் 7 மாத ஆண் குழந்தையை பொலிஸாரின் பொறுப்பில் எடுத்துள்



ளனர்.

வாதுவை வெரகம, பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 250 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வழக்குகளை...

கட்சிக்கு எதிராக யாழ்ப்பாணம், திருகோணமலை நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளை ஜனாதிபதி சட்டத்தரணிகள் கே.வி.தவராசா, புவிதரன், சிரேஸ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, சிறிஸ்கந்தராஜா ஆகியோரை கொண்ட குழுவின் ஊடாக கையாள்வதென இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு கூடி முடிவு செய்துள்ளது.

கிளிநொச்சியில் நேற்று மத்திய குழு உறுப்பினர்கள் சுமார் 32 பேர் வரையில் கூடி நடத்திய கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

முஸ்லிம் சுயேச்சைக் குழு சார்பில் கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட முயன்ற பீற்றர் இளஞ்செழியன் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். மற்றொருவர் திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

பீற்றர் இளஞ்செழியன் சார்பில் சட்டத்தரணி குருபரன் முன்னிலையாகியுள்ளார். இந்த வழக்கு அடுத்த தவணையில் முடிவடையவும் வாய்ப்புள்ளது என கூறப்படுகின்றது.

வழக்கை வாபஸ் பெறுவதெனில் சர்ச்சைக்குரிய மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி நிர்வாகிகள் தெரிவை அங்கீகரிக்க வேண்டும் என ஒரு தரப்பினர் கேட்டு வருகிறார்கள். மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சியின் புதிய தலைவர் சிறிதரனை நேரில் சந்தித்து இந்த விடயத்தை பேசியுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

கொழும்புக்கிளை உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட தரப்பினரும் இதே சமரச பேச்சை தொடர்ந்துள்ளனர்.

நேற்றைய மத்தியகுழு உறுப்பினர்களின் கலந்துரையாடலில் வைத்தியர் பா.சத்தியலிங்கமும் இதே கருத்தை முன்வைத்தார்.

என்றாலும், இந்த கோரிக்கைகளை கட்சியின் புதிய தலைவர் சிறிதரன் ஒரேயடியாக நிராகரித்தார். வழக்கை வாபஸ் பெறுவதெனில், நிபந்தனையற்ற விதமாக வழக்கை வாபஸ் பெற வேண்டுமென குறிப்பிட்டார். அதை பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஆதரித்தனர்.

கட்சிக்கு எதிரான வழக்குகளில் 7 பிரமுகர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அனைவரும் ஒத்த கருத்தாக ஒரே சட்டத்தரணிகள் குழுவின் மூலம் வழக்கை சந்திக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டது. இதன்போது குலநாயகம், எமது கட்சியிலும் இரண்டு சட்டத்தரணிகள் உள்ளனர்- சுமந்திரன், சயந்தன்- அவர்களையும் இணைத்து வழக்கை சந்திக்க வேண்டுமென்றார்.

இந்த கருத்தை யாரும் கண்டு கொள்ளவில்லை.

சுமந்திரன் இலங்கையில் இல்லாததால் நேற்றைய சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. அவர் தவிர்ந்த ஏனையவர்கள் தவராசா, புவிதரன், சிறிகாந்தா உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாமின் மூலம் வழக்கை சந்திக்க முடிவு செய்தனர்.

திருகோணமலை நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தலைமையில். ஜனாதிபதி சட்டத்தரணி புவிதரன், சட்டத்தரணி சிறிஸ்கந்தராஜா ஆகியோர் முன்னிலையாவர்.

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையிலான குழு முன்னிலையாகும்.

வழக்கு தொடர்ந்தவர்கள் நிபந்தனையற்ற விதமாக வழக்கை வாபஸ் பெறாவிட்டால், நீதிமன்றத்தில் யாப்பு விதிகளை மீறிய தவறை ஏற்றுக்கொண்டு, புதிதாக தெரிவை மேற்கொள்வோம் என சிறிதரன் குறிப்பிட்டார். (அ)

## போர்...

அந்தக் கட்சியின் - எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸவின் ஊழல் எதிர்ப்பு பயணத்தின் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சத்தியப்பிரிய லியனகே இராணுவத்தின் 54ஆவது தலைமை அதிகாரியாக பணியாற்றி 2019 ஒகஸ்ட் மாதம் ஓய்வு பெற்றிருந்தார். 1984 ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்தார். வன்னி இறுதிப் போர் காலத்தில், கவச படைப் பிரிவின் கட்டளை அதிகாரியாகவும் 52, 64 ஆவது படைப் பிரிவுகளின் கட்டளை அதிகாரி, 55ஆவது படைப் பிரிவின் துணைப் பொது அதிகாரியாகவும் பணியாற்றினார். அதிரடிப் படை 3இன் கட்டளை அதிகாரியாகவும் இவர் பணியாற்றியிருந்தார்.

இவர் தலைமை தாங்கிய அதிரடிப் படை - 3 பிரிவு வன்னி இறுதிப் போரின் இறுதிநாட்களில் போர் மற்றும் மனித உரிமைகளை மீறின என்று குற்றஞ்சாட்டப்பட்டது. வள்ளிபுனம் மருத்துவமனை மீதான தாக்குதல், பாலியல் வன்புணர்வுகள், சரணடைய முயன்றவர்களை கொன்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அதிரடிப் படை -3இன் மீது உள்ளதாக ஐ. நா. மனித உரிமைகள் பேரவை குறிப்பிட்டமை இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

இதேநேரம், சத்தியப்பிரிய லியனகே இறுதிப் போர் காலத்தில் கடுமையான போர் மற்றும் மனித குல விரோத நடவடிக்கைகள் என அதிக குற்றச்சாட்டுக்கு உள்ளான - பின்னாளில் 58ஆவது இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சவேந்திர சில்வாவின் கீழ் வன்னி இறுதிப் போரில் பங்கெடுத்திருந்தார். இருவரும் மிக நெருக்கமான நட்பை பாராட்டியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பௌர்ணமி...

ஏராளமான மக்கள் இந்த பொங்கல் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். பொங்கல் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த நிலையில், ஆலய வளாகத்துக்குள் ஆயுதங்களுடன் நுழைந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் அங்கிருந்த மக்களை விரட்டினர்.

இதன் பின்னர், பொங்கலில் பங்கேற்றிருந்த சிவில் செயல்பாட்டாளரான லவகுசராசாவிடம் நீதிமன்ற தடை உத்தரவை பொலிஸார் வழங்கினர். தொடர்ந்து, அங்கு நின்ற ஏனையவர்களையும் வலிந்து வெளியேற்றனர்.

கந்தசாமி மலை தொல்பொருள் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தொல்பொருளுக்கு ஏற்படுத்தும் விதமாக இவ்வாறான நிகழ்வுகளை முன்னெடுக்க முடியாது என்றும் நீதிமன்றத்திடம் தடை உத்தரவு வாங்கப்பட்டுள்ளதாக சிவில் செயல்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இந்த சம்பவத்தை கண்டித்துள்ள அந்தப் பகுதி மக்கள், இது தமிழ் சமூகத்தின் கலாசார மற்றும் மத வழிபாட்டு உரிமையை மீறும் செயல். இது விடயத்தில் உரியவர்கள் தலையிட்டு தமக்கு நீதி கிடைக்க வழிசெய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## கச்சதீவு...

ஆயிரம் பக்தர்கள் பங்கேற்றனர். இந்தியாவிலிருந்து பக்தர்கள் எவரும் வருகை தராத நிலையில் 5 அருட்தந்தையர்கள் மட்டுமே பங்கேற்றிருந்தனர்.

எல்லை தாண்டி இலங்கைக் கடலில் மீன்பிடித்த இந்திய மீனவர்கள் ஆறு பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்ததுடன், கச்சதீவு திருவிழாவையும் புறக்கணிப்பதாக அறிவித்திருந்தனர். இதன் காரணமாகவே அவர்கள் திருவிழாவில் பங்கேற்கவில்லை.

இதேசமயம், இன்று சனிக்கிழமை காலை கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவிழா நிறைவுபெறும்.

பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள் போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# மலையில் ஏறியவர் தவறிவிழுந்து உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 24

பதுளை - எல்லை மலைக்கு சுற்றுலா சென்ற இளைஞர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் மொரகொல்ல பிரதேசத்தை சேர்ந்த 22 வயது இளைஞராவார்.

இவர் காயமடைந்த நிலையில் வெல்லவாய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பஸ்ஸிலிருந்து...

- பருத்தித்துறை பிரதான வீதியில் நேற்றுக் காலை 7.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில், முல்லைத்தீவு ஒட்டுசுட்டானை சேர்ந்த அழகன் நிசாந்தன் (வயது 29) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணியாற்றுபவராவார். பணி இடத்துக்கு பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த 750 வழித்தட மினி பஸ்ஸில் பயணித்துள்ளார்.

இந்த நிலையில், நல்லூர் கோயில் அருகே இறங்க முனைந்தவர்களுக்காக அவர் வழிவிட முயன்றுள்ளார். அப்போது, மினிபஸ் நல்லூர் கோயில் முன்பாகவுள்ள வளைவில் திரும்பிக் கொண்டிருந்தது. இந்த நிலையில், வழிவிட முயன்ற இளைஞர் தவறி கீழே விழுந்தார். இதன்போது, அவரின் தலையில் பஸ்ஸின் சில்லு ஏறியதில் நசியுண்டு அதே இடத்தில் உயிரிழந்தார்.

விபத்துக் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## புலம்பெயர்...

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்படும் பேசாப்பொருள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலம்பெயர்வு என்பது புதிய விடயமல்ல. மனித வாழ்க்கை முறை ஆரம்பித்த காலத்திலிருந்து பல்வேறுபட்ட காரணங்களுக்காக இடம்பெயர்வுகள் நிகழ்ந்துள்ளன. மனிதன் தனக்கு சாத்தியமான வளங்கள் காணப்படும் பகுதிகளை நோக்கி நகர்வதை காண முடிகிறது.

இன்றளவில் நியூசிலாந்து வட அமெரிக்கா வரையில் இலங்கை உலகின் பல பகுதிகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு வாழ். இலங்கையர்களுக்கான நிதியம், அலுவலகம், அலுவலகச் சட்டமூலம் உள்ளிட்ட மூன்று விடயங்கள் குறித்து சுட்டிக்காட்டியிருந்தார்.

அதற்கமைய வெளிநாடு வாழ். இலங்கையர்களுக்கான அலுவலகம் கடந்த வருடத்தின் இறுதியில் கொழும்பு பழைய சார்டட் கட்டடத்தில் அமைச்சரவை அனுமதியுடன் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையர்கள் இதுவரையில் 5 அலையாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். 2.5 - 3 மில்லியன் வரையில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்திருப்பதாக அண்ணளவாக கணக்கிட்டுள்ளோம். அவர்களில் 1.6 மில்லியன் பேர் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக உள்ளனர்.

தொழிலாளர்கள் பதிவு செய்துவிட்டு செல்வதால் அவர்களுடைய தகவல்கள் எம்மிடத்தில் உள்ளன. ஏனைய காரணங்களுக்காக புலம்பெயர்ந்தவர்கள் பற்றிய தகவல்கள் சரியான வகையில் இல்லை. ஆனால், விரைவில் மற்றைய தூதரங்களைத் தொடர்பு கொண்டு இவர்கள் பற்றிய தகவல்களை நாம் சேகரிக்க முயற்சிக்கிறோம்.

அதற்காக அவர்களின் சுய விருப்பத்தின் பேரில் சில அடிப்படை தகவல்களை மாத்திரம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

இந்த தகவல்களின் இரகசியத்தன்மை முழுமையாக பாதுகாக்கப்படும் என்பதோடு, இந்த அலுவலகம் வெளிநாட்டு வாழ். இலங்கையர்களையும் தாயகத்தையும் ஒன்றிணைக்கும் மையப் புள்ளியாக செயற்படும்-என்றார். (அ)

## தென்னைமரவாடி...

என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டினர். இந்தப் படுகொலை களை தொடர்ந்து அங்கிருந்து சுமார் 260 தமிழ் குடும்பங்கள் வெளியேறின.

தற்போது பதவிசிறீபுர என்ற பெயர் மாற்றம் பெற்றுள்ள தென்னமரவாடியை அநுராதபுரத்துடன் இணைக்கும் முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. இதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நில இணைப்பைத் துண்டிப்பதே தென்னிலங்கையின் நோக்கம் என்று தமிழ்த் தேசியவாதிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்தநிலையில், தமிழ் மக்களுக்கு சொந்தமான 3 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்கள் பெரும்பான்மையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதில், 4 ஏக்கர் காணியில் பௌத்த விகாரை ஒன்றும் 2011ஆம் ஆண்டு முதல் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பிரதேசத்தை தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவித்துள்ள தொல்பொருள் திணைக்களம் அங்கு கட்டுமானங்களுக்கு தடை விதித்துள்ளது. இதனால், கந்தசாமி மலையில் அழிக்கப்பட்ட பழமைவாய்ந்த முருகன் ஆலயமும் கட்டப்படுவதற்கு தடை நீடிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## உயர்பாதுகாப்பு...

இருந்தனர்.

இதன்படி, நேற்று காலை 8 மணி முதல் வயாவிளான் மத்திய கல்லூரி முன்பாக ஆலயங்களுக்கு செல்ல வந்தவர்களை இராணுவத்தினர் பதிவு செய்தனர். 33 ஆண்டுகளின் பின்னர் சொந்த இடங்களிலுள்ள ஆலயங்களுக்கு தரிசிக்க பலரும் ஆவலுடன் சென்றிருந்தனர்.

பதிவின் பின்னர், மக்களின் உடைமைகள் அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. தொடர்ந்து அவர்களின், தொலைபேசிகள் மற்றும் கொண்டுசெல்ல முடியாது என்று படையினர் கூறிய பொருட்களை பதிவின்போதே வாங்கி வைத்துக் கொண்டனர்.

பேருந்துகளில் ஏற்றுவதற்கு முன்னரும் அவர்களை மீண்டும் சோதனையிட்டனர். இதன் பின்னர் இராணுவத்தினரின் வாகனங்களில், அவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

பலாலி இராஜேஸ்வரி அம்மன் கோயில், நாகதம்பிரான் கோயில், முத்துமாரி அம்மன் கோயில் உள்ளிட்ட 5 ஆலயங்களில் மக்கள் தரிசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு சென்று திரும்பியவர்கள் ஆலயங்கள் பராமரிப்பின்றி சிதிலமடைந்தும் - நிர்மூலமாகியும் காணபடுகின்றன என்றும் அங்கிருந்த விக்கிரகங்கள் பலவும் பெயர்த்து எடுக்கப்பட்டதுடன், பல விக்கிரகங்களும் ஆலயத்தில் இல்லை என்றும் வேதனை தெரிவித்திருந்தனர். மேலும், இந்த ஆலயங்களில் நித்திய பூசைகள் நடைபெற அனுமதியளிக்கப்படவும் வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதேநேரம், ஆலயத்துக்கு செல்வதற்காக பதிவுகளை மேற்கொண்டவர்களை செவ்வி கண்ட 3 ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய இராணுவத்தினர், அவர்கள் பதிவு செய்த படங்கள், மற்றும் காணொலிகளையும் அழித்தனர். தாங்கள் ஊடகவியலாளர்கள் என்பதற்கான அடையாளத்தை நிரூபித்த பின்னரும் இராணுவத்தினரால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டு - காணொலிகளையும் அழித்தனர் என்று பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஜெனிவா செல்லும் அலி சப்ரி குழுவினர்

## மனித உரிமை பேரவை அமர்வில் பங்கேற்க

கொழும்பு, பெப். 24

**இணையவழி பாதுகாப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியவற்றை நாட்டில் அமுல்படுத்துவதற்கு தீவிர முயற்சிகளை அரசாங்கம் எடுத்துள்ள நிலையில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரின் போது அவை கவனத்தில் கொள்ளப்படுமென மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்கள், மார்ச் மாதம் 4 ஆம் திகதி கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதன் போது ஆணையாளரின் வாய்மூல விளக்கமளிப்பும் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தொடரில் கலந்துகொள்ள வெளிவிவிகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று மார்ச் முதல் வாரத்தில் ஜெனிவா செல்ல உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் மனித உரிமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகளில் இலங்கை அடைந்துள்ள இலக்குகள் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்பிக்க உள்ளதாக அமைச்சர் அலி சப்ரி அண்மையில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும் இம்முறை இலங்கை அரசாங்கத்தின் மீது சில அழுத்தங்களை மனித உரிமைகள் பேரவை பிரயோகிக்கும் என மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# அணு ஆயுதத் தாக்குதல்களை எதிர்கொள்ள இலங்கை தயார்!

கொழும்பு, பெப். 24

இலங்கை மீது அணு ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டால் அதனால் ஏற்படும் கதிரியக்க நிலைமைகளை எதிர்கொள்ள இலங்கை தயாராக உள்ளதாக அணுசக்தி ஒழுங்குமுறை கவுன்சில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் கண்காணிப்பு குழு கூடிய போது குறித்த அதிகாரிகள் இதனை தெரிவித்தனர்.

அத்துடன், இதற்குத் தேவையான மனித வளமும், தேவையான உபகரணங்களும் தம்மிடம் இருப்பதாக அணுசக்தி ஒழுங்குமுறை கவுன்சில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# கைதி தப்பியோட்டம்!

மட்டக்களப்பு, பெப். 24

மட்டக்களப்பு சிறைச்சாலை கைதி ஒருவர், நேற்று காலை தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, அவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், அவருக்கு ஏற்பட்ட அவசர நோய் நிலைமை காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# மின்சார தேவை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 24

தற்போதைய நாட்களில் மின்சார தேவை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, நாளாந்த மின்சார தேவை 47 கிகாவோட் மணிநேரமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி வரை 50 சதவீதமாக இருந்த நீர்மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தியின் ஊடாக பிறப்பிக்கப்படும் மின்சாரம் என்பவற்றின் உற்பத்தி தற்போது 30 முதல் 35 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு பெரும்பான்மை இனப் பேராசிரியர் உட்பட நால்வர்!

வவுனியா, பெப். 24

வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவர் உட்பட நான்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக அறிய வருகிறது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் பேரவைச் செயலாளரால் புதிய துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான இறுதித் தினம் 21 ஆம் திகதி புதன்கிழமையாகும்.

துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங் கோரல் நிறைவடைந்த வேளையில் வவுனியாப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் இருவரும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரும், ருகுண மற்றும் ரஜரட்டை பல்கலைக் கழகங்களில் பணியாற்றிய பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் நால்வரது விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பேரவை விண்ணப்பங்களை ஆராய்ந்த பின்னர் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய விசேட பேரவைக் கூட்டத்துக்கான திகதியைத் தீர்மானிக்கும். அன்றைய விசேட பேரவைக் கூட்டத்தில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விவரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்து, நியமனம் செய்வார்.

# 10 இலட்சம் மின் இணைப்புகள் கடந்த ஆண்டு மட்டும் துண்டிப்பு

கொழும்பு, பெப். 24

கடந்த ஓராண்டில் 1 மில்லியன் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உட்பட பல நிறுவனங்கள் நேற்று குழுவின் முன் அழைக்கப்பட்ட போது இது தெரியவந்ததாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

துண்டிக்கப்பட்ட இணைப்புகளை உடனடியாக மீளப் பெற்றுத் தருமாறும், மின்சாரக் கட்டணத்தை தவணை முறையில் செலுத்தும் முறைமையை நடைமுறைப்படுத்துமாறும் பாராளுமன்ற உறுப்பினர் வலேபொட வலியுறுத்தியுள்ளார்.



மறு இணைப்புக் கட்டணத்தை வசூலிக்காமல் இணைப்புகளை மீட்டெடுக்க வேண்டும் என்றும், மறு இணைப்புக் கட்டணத்தை தவணை முறையிலும் வசூலிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# மானிய ஆணைக்குழுவுக்கு பதிலாக புதிய ஆணைக்குழு

கொழும்பு, பெப். 24

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் மார்ச் மாத இறுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக இந்த சட்டமூலம் குறித்து விவாதம் நடத்த எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.இது தொடர்பில் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் புதிய ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும்.

ஜனாதிபதி மற்றும் அரசியலமைப்புச் சபையால் நியமிக்கப்பட்ட 11 உறுப்பினர்களை இந்த ஆணைக்குழு உள்ளடக்கும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# நாட்டில் 40 ஆயிரத்துக்கும் மேல் போலி வைத்தியர்கள் பணியில்!

கொழும்பு, பெப். 24

நாடு முழுவதிலும் 40,000 க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் போலியாக செயற்பட்டு வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான வைத்தியர்கள் ஆபத்தான நிலையில் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் மருத்துவ உதவியாளர்கள், தாதியர்கள் அல்லது துணை மருத்துவ சேவைகளில் அங்கம் வகிக்கும் ஒருவர், மருத்துவர்களாகக் காட்டிக் கொண்டு அவர்களின் கிராமத்திலோ அல்லது சொந்த ஊரிலோ நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பது கண்டறியப்பட்டதாகவும் வைத்தியர் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார அமைப்பிற்குள், ஒரு நோயாளிக்கு மருந்துகளை பரிந்துரைக்கும் அறிவும், பொறுப்பும் மற்றும் அதிகாரமும் ஒரு மருத்துவருக்கு மட்டுமே உண்டு.

வேறு எந்த குழுவிற்கும் அவ்வாறு செய்ய அறிவு அல் லது அதிகாரம் இல்லை, ஒரு நோயாளி மருந்து பெற அல்லது மருத்துவரால் பரிந்துரைக்கப்படும் ஆய்வக சோதனைக்கு மட்டுமே உட்படுத்த முடியும் என வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியாவுடனான 4ஆவது டெஸ்ட் இங்கிலாந்து முதல்நாளில் 302/7

ராஞ்சி, பெப். 24

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்டம் நிறைவில் 302 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்துள்ளது.

இந்தியா- இங்கிலாந்து அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி ராஞ்சியில் நேற்று ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இங்கிலாந்து அணிக்கு ஜாக் கிராவ்லி, பென் டக்கெட் தொடக்கம் கொடுத்தனர்.

இருவரும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருந்தாலும், இந்தியாவின் அறிமுக வீரரான ஆகாஷ் தீப் இங்கிலாந்தின் முதல் மூன்று துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்தினார். இதில் கிராவ்லி 42




ஓட்டங்கள், டக்கட் 11 ஓட்டங்கள், ஒல்லி போப் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து அனுபவ வீரர் ஜோ ரூட் ஒருபுறம் நிலைத்து நின்றாட மறுமுனையில் பெயர்ஸ்ரோ 38 ஓட்டங்கள், பென் ஸ்ரோக்ஸ் 3 ஓட்டங்கள், போக்ஸ் 47 ஓட்டங்கள், ஹார்ட்லி 13 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தனர். இதையடுத்துன் றொபின்சன் களமிறங்கினார்.

நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோ ரூட் சதம் அடித்து அசத்தினார். இந்தத் தொடரில் அவரது முதல் சதம் இதுவாகும். இறுதியில் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 90 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 302 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இங்கிலாந்தின் ஜோ ரூட் 106 ஓட்டங்கள், றொபின்சன் 31 ஓட்டங்கள் எடுத்து களத்தில் உள்ளனர்.

இந்தியா தரப்பில் ஆகாஷ் தீப் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். (ஐ)

# பி. சி. சி. ஐ. ஒப்பந்தத்திலிருந்து ஸ்ரேயாஸ், இஷான் நீக்கம்!

புதுடில்லி, பெப், 24

இந்திய அணியின் இளம் வீரர்களான இஷான் கிஷன், ஸ்ரேயாஸ் ஐயர் ஆகியோரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி. சி. சி. ஐ.) ஒப்பந்தங்களில் இருந்து நீக்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது. இந்தியாவின் உள்ளூர் தொடரான ரஞ்சி கிண்ணத் தொடரில் விளையாடாததால் இந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் பணிச்சுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக இஷான் கிஷன் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடம் தெரிவித்தார். இதற்கமைய அவர் குடும்பத்தினருடன் நேரத்தை செலவழிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், அவர் டுபாயில் நடைபெற்ற புத்தாண்டு விருந்தில் பங்கேற்றிருந்தார்.

இதையடுத்து, அவர் சில தொடர்களில் ஓரங்கட்டப்பட்டார். அத்துடன், அவரை ரஞ்சி கிண்ணத்தில் விளையாடுமாறு பி. சி. சி. ஐ. வலியுறுத்தியது. ஆனால், அவர் அதில் விளையாடவில்லை.

இவரைப் போன்றே, ஸ்ரேயாஸ் ஐயரும் ரஞ்சிக் கிண்ணத்தில் விளையாடவேண்டும் என்று பி. சி. சி. ஐ.



வலியுறுத்தியது. ஆனால், அவர் தனக்கு முதுகுப்பிடிப்பு உள்ளதாகக் கூறினார்.

இதையடுத்து, அவருக்கு பி. சி. சி. ஐ. மருத்துவ சோதனை நடத்தியது. ஆனால், அவர் முழு உடல்தகுதியுடன் இருப்பது பரிசோதனையில் தெரிய வந்தது.

இந்த நிலையிலேயே இருவர் மீதும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால், இருவரும் மீண்டும் அணியில் இடம்பிடிப்பது கடினமாகியுள்ளது.



# முஹமது சமி விலகல்

அகமதாபாத், பெப். 24

குஜராத் ரைட்டன்ஸ் அணியிலிருந்து முன்னணி பந்துவீச்சாளர் முஹமது சமி விலகியுள்ளார். இது அந்த அணிக்கு பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரின் 17ஆவது பருவம் எதிர்வரும் மார்ச் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதில், குஜராத் ரைட்டன்ஸ் அணி பந்துவீச்சு, துடுப்பாட்டம் என்பவற்றில் பலமாக உள்ளது. அந்த அணியின் தலைவராக ஹார்திக் பாண்ட்யா செயல்பட்டார். அவரை, மும்பை இந்தியன்ஸ் விலைக்கு வாங்கியது.

இந்த நிலையில், குஜராத் அணியின் முன்னணி பந்துவீச்சாளரான முஹமது சமி காயத்தால் ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகியுள்ளார். இவரின் விலகல் அந்த அணிக்கு பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது. (ஐ)



# சியூசிலாந்துடனான ரி - 20 தொடரை வென்றது ஆஸி.

ஒக்லாந்து, பெப். 24

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்து சென்று 3 இருபது - 20 மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இருபது - 20 தொடரில் முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது இருபது - 20 போட்டி நேற்று நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணிக்கு டிராவிஸ் ஹெட், ஸ்ரீவ் ஸ்மித் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர்.

இதில் ஸ்மித் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து களம் இறங்கிய மிற்செல் மார்ஷ் 26 ஓட்டங்கள், மக்ஸ்வெல் 6 ஓட்டங்கள், இங்கிலிஸ் 5 ஓட்டங்கள், ஹெட் 17 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹெட் 45 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் அவுஸ்திரேலிய அணி 19.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 174 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. நியூசிலாந்து தரப்பில் அபாரமாக பந்துவீசிய பெர்குசன் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 175 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து ஆடியது.

நியூசிலாந்துக்கு தொடக்கம் கொடுத்த, பின் அலன் 6 ஓட்டங்கள், வில் யங் 5 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தனர். இதையடுத்து களம் இறங்கிய சாண்ட்னெர் 7 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். இதையடுத்து பிலிப்ஸ் ஒருபுறம் நிலைத்து நின்றாடினார். ஆனால், மறுபுறம் விக்கெட்கள் வீழ்ந்தன.

இதில் சாம்ப்மென் 2 ஓட்டங்கள், கிளார்க்சென் 10 ஓட்டங்கள், மில்னே 0, போல்ட் 16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். மறுபுறம் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய பிலிப்ஸ் 42ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் நியூசிலாந்து 17 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 102 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் அவுஸ்திரேலியா 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரை 2-0 என கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான இறுதி இருபது - 20 போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)

# ஐ. பி. எல். இருபது - 20 அட்டவணை வெளியீடு!

மும்பை, பெப். 24

2024 ஐ. பி. எல். தொடருக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மார்ச் 22ஆம் திகதி தொடங்கும் முதல் ஐ. பி. எல். போட்டியில் சென்னையை எதிர்கொள்கிறது பெங்களூர்.

ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரின் 17ஆவது பருத்துக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. முதல் 21 போட்டிகளுக்கான கால அட்டவணை மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல், மே மாதங்களில் இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த காலக் கட்டங்களில் ஐ. பி. எல். ரி - 20 தொடரின் போட்டிகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஐ. பி. எல். அட்டவணை முழுவது மாக அறிவிக்கப்படாமல் மார்ச் 22 - ஏப்ரல் 7ஆம் திகதி வரை நடக்கும் 21 போட்டிகளுக்கான கால அட்டவணை மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் திகதி அறிவிப்புக்கு பின் முழு அட்டவணையும்



வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வரும் மார்ச் 22ஆம் திகதி தொடங்கும் முதல் ஐ. பி. எல். போட்டியில் சென்னையை எதிர் கொள்கிறது பெங்களூர். இந்தப் போட்டி சென்னை சேப்பாக்கத்தில் நடக்கிறது.

**போட்டி அட்டவணை:**

மார்ச் 22 சென்னை - பெங்களூர் - மாலை 6.30
மார்ச் 23 பஞ்சாப் - டில்லி - பி. ப. 2.30
மார்ச் 23 கொல்கத்தா - ஹைதராபாத் - மாலை 6.30
மார்ச் 24 ராஜஸ்தான் - லக்னோ - பி. ப. 2.30
மார்ச் 24 குஜராத் - மும்பை - மாலை 6.30
மார்ச் 25 பெங்களூர் - பஞ்சாப் - மாலை 6.30
மார்ச் 26 சென்னை - குஜராத் - மாலை 6.30
மார்ச் 27 ஹைதராபாத் - மும்பை - மாலை 6.30
மார்ச் 28 ராஜஸ்தான் - டில்லி - மாலை 6.30
மார்ச் 29 பெங்களூர் - கொல்கத்தா - மாலை 6.30
மார்ச் 30 - லக்னோ - பஞ்சாப் - மாலை 6.30
மார்ச் 31 குஜராத் - ஹைதரபாத் - பி. ப. 2.30
மார்ச் 31 டில்லி - சென்னை - மாலை 6.30
ஏப்ரல் 01 மும்பை - ராஜஸ்தான் - மாலை 6.30
ஏப்ரல் 02 பெங்களூர் - லக்னோ - மாலை 6.30
ஏப்ரல் 03 டில்லி - கொல்கத்தா - மாலை 6.30
ஏப்ரல் 04 குஜராத் - பஞ்சாப் - மாலை 6.30
ஏப்ரல் 05 ஹைதராபாத் - சென்னை - மாலை 6.30
ஏப்ரல் 06 ராஜஸ்தான் - பெங்ளூர் - மாலை 6.30
ஏப்ரல் 07 மும்பை - டில்லி - பி. ப. 2.30
ஏப்ரல் 07 லக்னோ - குஜராத் - பி. ப. 2.30

# உலகின் இரண்டாவது மிகப்பெரிய மீத்தேன் கசிவு விபத்து எப்படி நடந்தது?

பசுமைக்குடில் வாயுக்களில் கார்பன் டை ஆக்ஸைடை விட, அதிக பாதிப்பை ஏற்படுத்துவது மீத்தேன். உலக நாடுகள் அனைத்தும் மீத்தேன் உமிழ்வை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனாலும், உலகம் முழுவதிலும் ஆங்காங்கே நடைபெறும் விபத்துகளால் ஏற்படும் மீத்தேன் கசிவு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

கடந்த ஆண்டு உலகின் மிக மோசமான மீத்தேன் கசிவு கஜகஸ்தானின் கிராமப்புறப்பகுதி ஒன்றில் உள்ள கிணற்றில் நடந்துள்ளது. சமீபத்தில் வெளியான புதிய பகுப்பாய்வு அறிக்கை மூலம் இதை உறுதி செய்துள்ளது பிபிசி வெரிஃபை குழு.

இந்த விபத்தில் ஏற்பட்ட தீப்பரவல் ஆறு மாதங்களுக்கும் மேலாக நீடித்தது. இதில் 1,27,000 டன் வாயு வெளியேறியதாக ஆய்வில் மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், மீத்தேன் வெளியேறிய கிணற்றின் உரிமையாளரான புசாச்சி நெஃப்ட் நிறுவனம், இந்த அளவுக்கான மீத்தேன் வெளியேறியுள்ளது என்ற கூற்றை மறுத்துள்ளது.



ஆதாரம் : கோபர்நிகஸ் சென்டினல்-2, 2 அக்டோபர் 2023 BBC

அமெரிக்கச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் பசுமைக்குடில் வாயு கால்குலேட்டரின் படி, இந்த அளவிற்கான மீத்தேன் கசிவினால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பானது, ஒரு ஆண்டிற்கு 7,17,000 க்கும் மேற்பட்ட பெட்ரோல் கார்களை ஓட்டுவதற்கு நிகரானது என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கசிவு குறித்து பேசியுள்ள ஐ.நா.வின் சர்வதேச மீத்தேன் உமிழ்வு ஆய்வகத்தின் தலைவர் மன்ஃப்ரெடி கால்டகிரோன், "இந்தக் கசிவின் அளவு மற்றும் கால அளவு அசாதாரணமானது என்றும், இது மிகவும் பெரியது," என்றும் கூறியுள்ளார்.

**விபத்து எப்படி நடந்தது?**

தென்மேற்கு கஜகஸ்தானின் மங்கிஸ்டாவ் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் துளையிட்டுக் கொண்டிருக்கும் போது, 2023-ஆம் ஆண்டு ஜூன் 9-ஆம் தேதி இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது. இதில் அந்த கிணற்றில் இருந்து மீத்தேன் கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட தீ பரவல் 2023-ஆம் ஆண்டு இறுதி வரை அணையாமல் எரிந்து கொண்டிருந்தது.

இறுதியில் 2023-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் தேதி அன்றுதான் தீப்பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தற்போது அந்த கிணற்றை சிமெண்ட் கொண்டு மூடும் பணி நடந்து வருவதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இயற்கை எரிவாயுவின் முதன்மைகூறான மீத்தேன் வாயுவை மனிதர்களால் வெறுங்கண்ணால் பார்க்க முடியாது.

ஆனால், மீத்தேன் கூட்டமாக சூழ்ந்துள்ள இடத்தில் சூரியஒளி படும்போது, தனித்துவமான தடயத்தை அது உருவாக்குகிறது. இதை சில செயற்கைக்கோள்களால் கண்டறிய முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மீத்தேன் கசிவு குறித்து முதலில் பிரெஞ்சு புவி பகுப்பாய்வு நிறுவனமான கெய்ரோஸ் ஆய்வு செய்தது. அவர்களது ஆய்வு முடிவுகள் தற்போது நெதர்லாந்தின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஸ்பெயினில் உள்ள வலென்சியா பாலிடெக்னிக் பல்கலைக்கழகத்தால் சரிபார்க்கப்பட்டுள்ளது.

ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட செயற்கைக்கோள் தரவுகளை ஆராய்ந்து, 115 தனித்தனி சூழல்களில் அதிக செறிவுள்ள மீத்தேன் காணப்பட்டதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

**"இரண்டாவது மிகப்பெரிய மீத்தேன் கசிவு"**

இந்த அளவீடுகளை அடிப்படையாக கொண்டு, அந்த ஒரே கிணற்றிலிருந்து 1,27,000 டன் மீத்தேன் வெளியேறியுள்ளது என்ற முடிவுக்கு வந்துள்ளனர் விஞ்ஞானிகள்.

மீத்தேன் செறிவு, 7 செப்டம்பர் 2023
குறைவு அதிகம்



ஆதாரம் : கெய்ரோஸ், பிளானட் லேப்ஸ் BBC

எனவே, இந்த நிகழ்வை மனிதர்களால் உருவாக்கப்பட்ட இரண்டாவது மோசமான மீத்தேன் கசிவு என்று எடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறுகின்றனர்.

கசிவை உறுதிசெய்யும் ஆய்வில் உதவிய வலென்சியா பாலிடெக்னிக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லூயிஸ் குவாண்டர், "நோர்ட் ஸ்ட்ரீம்" (Nord Stream) அழிவு மட்டுமே இந்தளவு அதிகமான கசிவை ஏற்படுத்த முடியும்," என்று கூறுகிறார்.

செப்டம்பர் 2022-இல், ரஷ்யாவில் இருந்து ஜெர்மனிக்கு இயற்கை வாயுவைக் கொண்டு செல்லும் இரண்டு குழாய்கள், நீருக்கடியில் குண்டு வெடித்ததில் சேதமடைந்தது. இதில் நோர்ட் ஸ்ட்ரீம் 1 மற்றும் 2 குழாய்களில் இருந்து 2,30,000 டன் மீத்தேன் வளிமண்டலத்தில் வெளியிடப்பட்டது.

சர்வதேச ஆற்றல் முகமையின் கூற்றுப்படி, தொழில்ப்



புரட்சிக்குப் பின் உலக அளவில் ஏற்பட்ட 30% வெப்பநிலை அதிகரிப்புக்கு மீத்தேன் தான் காரணம்.

மேகமூட்டம் உள்ளிட்ட வேறு சில காரணங்களால் செயற்கைக்கோள் கணக்கீடுகளில் தாக்கம் ஏற்பட்டிருந்தாலும், இந்த ஒரு கிணற்றில் இருந்து மட்டும் அதிகளவிலான மீத்தேன் கசிந்துள்ளது என்பதில் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளனர் விஞ்ஞானிகள்.

இதுகுறித்து பேசிய குவாண்டர், "வெவ்வேறு மீத்தேன் உணர்திறன் கொண்ட ஐந்து செயற்கைக்கோள்களின் மூலம், இந்த மீத்தேன் புகைப்படலம் கண்டறியப்பட்டுள்ளது," என்று கூறினார்.

மேலும், "இந்த ஒவ்வொரு செயற்கைக்கோள்களும் மீத்தேனை குறிப்பிட்ட வழிகளில் அளவிடுகின்றன, ஆனால், அவற்றிலிருந்து நிலையான அளவீடுகளை மட்டுமே நாங்கள் எடுத்துக்கொண்டோம்," என்று தெரிவிக்கிறார்.

மங்கிஸ்டாவ் சூழலியல் துறை தனது அறிக்கை ஒன்றில், ஜூன் 9 மற்றும் செப்டம்பர் 21-க்கு இடைப்பட்ட காலத்தில் 10 வெவ்வேறு நேரங்களில், காற்றில் மீத்தேன் செறிவு சட்டவரம்புகளுக்கு அதிகமாக காணப்பட்டதாக, உறுதிப்படுத்தியுள்ளது.

**நிறுவனம் என்ன சொல்கிறது?**

மேலும், வெடிவிபத்துக்கு அடுத்த சில மணிநேரங்களில் காற்றில் மீத்தேன் அளவு அனுமதிக்கப்பட்ட அளவை விட 50 வீதம் அதிகமாக இருந்ததாக அதில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், கிணற்றின் உரிமையாளரான கஜகஸ்தானை சேர்ந்த புசாச்சி நெஃப்ட் நிறுவனம், அதிகளவிலான மீத்தேன் வெளியாகியுள்ளது என்ற தகவலை மறுத்துள்ளது.

மேலும், அந்தக் கிணற்றில் குறைந்த அளவு வாயுவே இருந்ததாகவும், ஆழ்துளை கிணற்றில் இருந்து எந்தளவிலான வாயு வெளியாகியிருந்தாலும் தீ பற்றியிருக்கும் என்று அந்நிறுவனம் கூறியுள்ளது.

அதேபோல், கிணற்றிலிருந்து நீராவி மட்டுமே வெளியாகியிருக்கும் என்றும், அதுவே செயற்கைக்கோள் பார்க்கும்போது வெள்ளை புகைப்படலாம் போல் தெரிந்திருக்கும் என்றும் தாங்கள் நம்புவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பேசியுள்ள அந்த நிறுவனத்தின் மூலோபாய வளர்ச்சிக்கான துணை இயக்குனர் டானியார் துசெம்பாயேவ், "நாங்கள் இந்த விபத்தை பொறுப்புடன் அணுகியுள்ளோம்," என்று தெரிவித்துள்ளார்.

இந்த விஷயம் குறித்து ஆராய புசாச்சி நெஃப்ட் நிறுவனமும், தனி ஆய்வு குழு ஒன்றை அமர்த்தியுள்ளது. இந்த ஆய்வு கெய்ரோஸின் ஆய்வு முடிவுகளை கேள்விக்குட்படுத்தியுள்ளது. ஆனால், அதன் அறிக்கைகளை பார்க்க பிபிசி அனுமதிக்கப்படவில்லை.

அந்த நிறுவனத்தின்படி, செயற்கைகோள்கள் மீத்தேனுக்கு பதிலாக, வளிமண்டலத்தில் தெரிந்த நீராவி போன்ற வேறு வாயுக்களை தவறுதலாக கணிக்கிட்டு விட்டதாகவும், கெய்ரோஸின் ஆய்வில் இந்த வெடிப்பு சம்பவத்திற்கு முன்பே வளிமண்டலத்தில் காணப்பட்ட மீத்தேன் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும், அந்த ஆய்வு பரிந்துரைத்துள்ளது.



ஆனால், கசிவு குறித்த கெய்ரோஸின் ஆரம்பகட்ட ஆய்வை சரிபார்த்த குழுக்கள் இந்த கூற்றை மறுக்கின்றன.

இதுகுறித்து பேசிய குவாண்டர், "நீராவி அல்லது புகையின் விளைவுகள் என்ன என்பதை நாங்கள் சோதித்தோம். அதன் முடிவுகளுக்கும், எங்களது அளவீடுகளுக்கும் எந்த தொடர்பையும் நாங்கள் கண்டறியவில்லை," என்று கூறியுள்ளார்.

மேலும், தங்களது விஞ்ஞானிகள் "ஒற்றை மீத்தேன் புகைப்படலங்களை" மட்டுமே தேடியதாகவும், எனவே "விபத்திற்கு முன்பு ஏற்கனவே வளிமண்டலத்தில் காணப்பட்ட மீத்தேன் தங்களது வழிமுறையில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது" என்றும் அவர் கூறியுள்ளார்.

**மீத்தேன் உமிழ்வை குறைக்க கஜகஸ்தான் முடிவு**

இந்த விபத்து குறித்த அதிகாரபூர்வ விசாரணை அட்யூராவின் தொழில்துறை பாதுகாப்புக் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விசாரணையில், புசாச்சி நெஃப்ட் நிறுவனம் கிணறு துளையிடும் பணியை சரியாக மேற்பார்வை செய்யவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் துளையிடும் பணியில் ஏற்பட்டுள்ள பல்வேறு குளறுபடிகளுக்கு துணை ஒப்பந்ததாரரான ஜமான் எனர்கோ மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால், இதுகுறித்து அவர் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார்.

கஜகஸ்தான் எரிசக்தி அமைச்சகம் வழங்கியுள்ள அறிக்கையில், "இந்தக் கசிவை கையாள்வது சிக்கலான தொழில்நுட்ப பணி என்றும், இது போன்ற விபத்துகளுக்கு உலக அளவில் எந்த விதமான தீர்வும் இல்லை," என்றும் தெரிவித்துள்ளது.

மத்திய ஆசிய பகுதியில் இது போன்ற பெரிய மீத்தேன் கசிவு விபத்து ஏற்படுவது இது முதல் முறையல்ல.

அண்டை நாடான துர்க்மெனிஸ்தானைப் போலவே, கஜகஸ்தானும் டஜன் கணக்கான 'சூப்பர்-எமிட்டர்' நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

சூப்பர்-எமிட்டர் என்பது வளிமண்டலத்தில் அதிக அளவு மீத்தேன் வெளியிடப்படும் நிகழ்வுகளை விவரிக்க விஞ்ஞானிகளால் பயன்படுத்தப்படும் பதமாகும்.

ஆனால், இதுவரை நடந்த மீத்தேன் கசிவு சம்பவங்களிலேயே மங்கிஸ்டாவில் நடந்த நிகழ்வே பெரியது எனவும், மற்றவற்றில் இருந்து அது தனித்து நிற்பதாகவும் தெரிவிக்கிறார் குவாண்டர்.

காலநிலை மாற்றத்தைத் தொடர்ந்து கண்காணித்து வரும் காலநிலை நிபுணர்கள், இயற்கை எரிவாயு உற்பத்தி அதிகரிப்பின் மூலம், மேலும் அதிகமான மீத்தேன் கசிவு அபாயத்தை கஜகஸ்தான் எதிர்கொள்ளும் என்று கூறுகின்றனர்.

கடந்த ஆண்டு நடந்த COP28 காலநிலை உச்சிமாநாட்டில், 2030-ஆம் ஆண்டுக்குள் உலகளவிலான மீத்தேன் உமிழ்வை 30வீதம் குறைப்பதற்கான தன்னார்வ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 150 நாடுகளில் கஜகஸ்தானும் ஒன்று.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையே பாலம் கட்டப்படாதது தமிழ் தேசியத்தை வலுவிழக்கச் செய்யும் முயற்சியா?


ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் அதிகளவில் வாழ்கின்றனர். இந்த இரண்டு மாகாணங்களுக்கு இடையில் சுமார் 800 மீட்டர் பகுதியை கடல் நீர் பிரிக்கிறது. இதை கடல் வழியாக கடக்க 6 நிமிடங்களே ஆகும், ஆனால் சாலை மார்க்கமாக செல்ல இரண்டரை மணிநேரம் தேவைப்படும்.

தற்போது, இந்த இரு மாகாணங்களை இணைக்கும் விதத்தில் ஒரு பாலம் இதுவரை கட்டப்படாதது ஏன், அதற்கான காரணம் என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது.

இலங்கையில் மாகாண சபை முறைமை 1987-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அப்போது வடகிழக்கு மாகாணமாக இணைந்தே காணப்பட்டது. ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் ராஜீவ் காந்தி இணைந்து மாகாண சபை முறைமையை 1987-ஆம் ஆண்டு கொண்டு வந்திருந்தனர்.






இலங்கையில் 1978-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தற்போதைய அரசியலமைப்பில் 13-வது திருத்தமாக மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டது.

இதன்படி, தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைந்ததாகவே மாகாண சபைகள் உருவாக்கப்பட்டிருந்தன. இலங்கையின் முதலாவது மாகாண சபை தேர்தல் 1988-ஆம் ஆண்டு நடத்தப்பட்டு, மாகாண சபை அமுலுக்கு கொண்டு வரப்பட்டது.

எனினும், வடகிழக்கு மாகாண சபை குறுகிய காலமே செயற்பட்ட நிலையில், 1990-ஆம் ஆண்டு குறித்த மாகாண சபை கலைக்கப்பட்டது.

அதன் பின்னரான காலத்தில் வடகிழக்கு மாகாண சபைக்காக தேர்தல் நடத்தப்படாத பின்னணியில், வடகிழக்கு மாகாண சபையை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளாக பிரிக்க வேண்டும் என ஜேவிபியால் உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் பிரகாரம், வடகிழக்கு மாகாண சபை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளாக பிரிக்கப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் 2006-ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது.

இதையடுத்து, 2008-ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலும், 2013-ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலும் முதல் முறையாக நடத்தப்பட்டன.

**நிலவியல் ரீதியில் பிரிந்திருக்கும் வடக்கும் கிழக்கும்**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் நிலப்பரப்பு ரீதியில் பிரிந்தே இன்றும் காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்திற்கும், கிழக்கு மாகாணத்திற்கும் இடையில் சுமார் 800 மீட்டர் பகுதியை கடல் நீர் பிரிக்கின்றமையே இந்த இரண்டு மாகாணங்களும் இன்று வரை பிரிந்துள்ளமைக்கான காரணமாக அமைந்துள்ளது.

வடக்கு மாகாணத்தின் எல்லைப் பகுதியாக கொக்கிளாய் பகுதி காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தின் எல்லைப் பகுதியாக புல்மோட்டை பகுதி காணப்படுகின்றது.

இந்த இரண்டு மாகாணங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்வதற்காக சிறிய படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. 800 மீட்டர் தூரத்தை படகின் மூலம் சுமார் 6 நிமிடங்களில் கடக்க முடியும். எனினும், கிழக்கு மாகாணத்திலிருந்து வடக்கு மாகாணத்தின் எல்லைக்கு வீதியூடாக செல்வதற்கு சுமார் 60 கிலோமீட்டர் காணப்படுகின்றன.

இந்த 60 கிலோமீட்டரை சென்றடைவதற்கு சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் தேவைப்படுகின்றன. 6 நிமிடங்களில் கடக்க வேண்டிய இந்த பயணத்திற்கு சுமார் இரண்டரை மணித்தியாலங்களை மக்கள் செலவிட்டு வருகின்றனர்.

இந்த இரண்டு பகுதிகளையும் படகில் கடப்பதற்கு 6 நிமிடங்கள் எடுக்கின்ற அதேவேளை, பாலம் அமைக்கப்பட்டால் 2 அல்லது 3 நிமிடங்களில் செல்ல முடியும் என மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

மேலும், கொக்கிளாய் மற்றும் புல்மோட்டைக்கு இடையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் ஓரிரு சிறிய படகுகளே காணப்படுகின்றன. ஏனைய படகுகள் கடற்றொழிலுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதை காண



முடிகின்றது. அதனால், இரண்டு நகரங்களுக்கும் இடையில் பயணிக்க மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

**“தமிழ் தேசிய கோட்பாட்டை வலுவிழக்கச் செய்யும் முயற்சி”**

நில ரீதியாக இணைப்பு ஏற்படும் பட்சத்தில், தமிழ்த் தேசிய கோட்பாடு வலுவடையும் என அரசியல் விமர்சகரும், ஒருவன் செய்திச் சேவையின் பிரதம ஆசிரியருமான அ.நிக்ஸன் தெரிவிக்கின்றார்.

“இது மிகவும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த பாலத்தை நிர்மாணித்தால் வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது உறுதியாகும். எப்படியென்றால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து இலகுவாகும். ஆகவே நில ரீதியான தொடர்பு அங்கே வருகின்றது. நிலத் தொடர்பு வருகின்ற போது, தமிழ்த் தேசிய கோட்பாட்டிற்கு அது வலுச் சேர்க்கும்,” என்றார்.

மேலும், “தமிழ்த் தேசிய கோட்டை உடைக்க வேண்டும், அந்த கோரிக்கையை வலுவிழக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக தான் நில ரீதியிலான பிரிவுகளை இலங்கை அரசாங்கம் செய்து வருகின்றது. 1941-ஆம் ஆண்டு கல்ஓயா திட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கள குடியேற்றம், சிங்கள, தமிழ், முஸ்லிம் குடியேற்றம் என்று சொல்லப்பட்டாலும், அங்கு சிங்கள மக்களே குடியேற்றப்பட்டார்கள்,” என்றார்.

“அங்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த குடியேற்றத்தின் நோக்கமே, இந்த நிலப் பிரிப்பு தான். ஆகவே நில ரீதியாக பிரிக்கப்பட்டால் தான் வடக்கு, கிழக்கு மாகாணத்தை பிரிக்க முடியும். அத்தோடு, தமிழ்த் தேசியம் என்ற கோட்பாட்டையும் வலுவிழக்கச் செய்ய முடியும். ஆகவே தமிழ்த் தேசிய கோட்பாட்டின் மிக வலுவாக இருப்பது அந்த பாலம் தான்,” என்கிறார் நிக்ஸன்.

மேலும், “இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான நிலத் தொடர்பு ஏற்பட்டு விடும். தென் பகுதியுடன் இணையாது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித்து இயங்கக்கூடிய நிலைமை ஏற்படும். கடல் மற்றும் விவசாய வளங்கள் அங்கு காணப்படுகின்றன,” என்றார்.

“அந்த வளங்களின் ஊடாக உள்ளூர் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து, தாமாகவே தமது பொருளாதார வாழ்வாதாரத்தை சீரமைத்துக்கொள்ள முடியும். ஆகவே அந்த அடிப்படையில் தான் இது தடுக்கப்படுகின்றது,” என நிக்ஸன் குறிப்பிடுகின்றார்.

**“வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நிராகரிக்கப்படுகின்றன”**

கொக்கிளாய் மற்றும் புல்மோட்டை பகுதிகளுக்கு இடையிலான பாலம் நிர்மாணிக்கப்படாமைக்கான பதிலை ஆட்சியாளர்களே வழங்க வேண்டும் என வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவிக்கின்றார்.

“கொக்கிளாய் பாலத்தை பொருத்த வரையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையிலிருந்து திருகோணமலை மாவட்டத்தின் எல்லையான புல்மோட்டை வரையான பகுதி கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டருக்கு உட்பட்ட தூரத்திற்கு தான் பாலம் போட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இது ஏற்கனவே, அமைச்சரவையில் பேசப்பட்டதாக கூறப்படுகின்றது. அது அங்கீகரிக்கப்பட்டதாக கூட செய்திகள் வந்துக்கொண்டிருந்தன,” என்கிறார் ரவிகரன்.

“மாகாண சபை காலத்தில் நாங்கள் கொக்கிளாய் பாலத்தின் அவசியத்தையும், நந்திக்கடல் பாலத்தின் அவசியத்தையும் மிக முக்கியமாக சுட்டிக்காட்டப்பட்டது. இந்த பாலத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்கும் அளவுக்கு மாகாண சபைக்கு வசதிகள் கிடையாது,” என்கிறார் ரவிகரன்.

தொடர்ந்து பேசிய அவர், ‘எல்லா மாவட்டங்களையும் ஒரே நோக்கத்தோடு தங்களுடைய பிரஜைகள் என்ற எண்ணத்தோடு அரசாங்கம் பார்க்குமாக இருந்தால், இந்த பாலத்தை எப்போதோ செய்திருக்கலாம். இந்த பாலம் இப்படியாக இருப்பதற்கு ஒவ்வொரு ஆட்சியாளரும் பதில் சொல்ல வேண்டும். முக்கியமான அபிவிருத்தி தேவைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவதில்லை,” என்றார்.

“எவ்வளவு மக்கள் போக்குவரத்துக்காக கஷ்டப்படுகின்றார்கள். பிரதான வீதியூடாக சுற்றி வருகின்றார்கள். பாலம் போட்டால் குறுகிய நேரத்தை செலவிடும் மக்



கள், கூடுதலான நேரத்தை செலவிட்டு இந்த பாதை இல்லாத துன்பத்தை அனுபவிக்கின்றார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களை எவ்வளவு நிராகரிக்க முடியுமோ? அந்தளவிற்கு நிராகரிக்கின்றார்கள்,” என அவர் குறிப்பிடுகின்றார்.

**கிழக்கு மாகாண மக்களின் கருத்து என்ன?**

பாலத்தை நிர்மாணிப்பதற்காக அளவீடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பாலம் இன்று வரை நிர்மாணிக்கப்படவில்லை என கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பைசர் குறிப்பிடுகின்றார். ஏமாற்றம் மாத்திரமே தமக்கு எஞ்சியுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

“புல்மோட்டை மக்களுக்கும் சரி, கொக்கிளாய் மக்களுக்கும் சரி போக்குவரத்து பிரச்னையொன்று இருக்கின்றது. பாலம் ஒன்று முக்கியமாக தேவைப்படுகின்றது. பொதுமக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு படகு மூலமாக போகின்றார்கள். மோட்டார் சைக்கிள்களை படகில் ஏற்றிக் கொண்டு போகின்றார்கள். படகிற்கு பணம் செலுத்த வேண்டும். படகில் ஏற்றப்படும் பொருட்களின் அளவுக்கு ஏற்ப பணம் செலுத்த வேண்டும்.”

(16ம் பக்கம் பார்க்க)

# பாடசாலைக்கு பல்ஊடக கருவி



அம்பாறை, பெப். 24

சாய்ந்தமருது லீடர் எம்.எச். எம்.அஷ்ரப் வித்தியாலயத்திற்கு பல் ஊடகக்கருவி வழங்கி வைக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 01 புதிய மாணவர்களை வரவேற்று கற்றல் உபகரணம் வழங்கி வைக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகாரசபை முன்னாள் பணிப்பாளரும், மயோன் குரூப் நிறுவனத்தின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்தின் வேண்டுகோளையேற்று தனது கல்வி உதவித்திட்டத்தின் கீழ் சொந்த நிதியிலிருந்து மல்றிமீடியாவை வழங்கி வைத்தார்.

கல்முனை வலயக்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரியுமான எம்.என்.எம்.ஏ. மலிக், ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி எம்.எம். இஸ்மாயில், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளர் யூ.எல்.என். ஹுதா உமர், மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஏ.எம். றிஸ்வான், முன்னாள் பிரதி அதிபர் அப்துல் நிஸார், பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எம். சுஜான், ஆசிரியை, ஆசிரியர்கள் பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் உட்பட பெற்றோர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

"வடக்கும் கிழக்கும் இணைந்து விடுமோ என்ற காரணத்தினாலோ தெரியவில்லை இந்த பாலம் போடாமைக்கு. அதுவாகவும் இருக்கலாம். இரண்டு பகுதிகளுக்கும் இடைப்பட்ட பகுதியை அளந்தார்கள். ஆனால் இதுவரை எந்தவித பயனும் இல்லை. மஹிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தான் அளக்கப்பட்டது.ஆனால் இப்போது எந்தவொரு நடவடிக்கையும் இல்லை. ஏமாந்தது மாத்திரமே மிச்சமாக இருக்கின்றது." என கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பைசர் தெரிவிக்கின்றார்.

வியாபார நோக்கத்திற்காகவேனும் இந்த பாலம் அமைக்கப்பட வேண்டும் என கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சாதீக் கோரிக்கை விடுக்கின்றார்.

"புல்மோட்டையிலுள்ள நோயாளர்கள் அண்மை காலமாக அதிகளவில் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஆனால், சுற்றி போக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு செல்வதற்கு அதிகளவான நேரத்தையும் அதிகளவான தூரத்தை கடக்க வேண்டியுள்ளது. காசு வீணாக செல்கின்றது என்பதை கவலையாக தெரிவிக்கின்றேன். குறிப்பாக வியாபார நோக்கத்திற்காக இந்த பாலம் அமைத்தால், மிகவும் நல்லதாக இருக்கும்," என கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சாதீக் கூறுகின்றார்.

**வட மாகாண சிங்கள மக்களின் கருத்து**

"இந்த பாலம் தொடர்பில் எந்த காலத்திலிருந்து சொல்கின்றார்கள். ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் என்றால் பரவாயில்லை. கடந்த 10-12 வருடங்களாக இழுத்தடிப்பாகவே காணப்படுகின்றது. இதற்கு தீர்வொன்று இதுவரை இல்லை. எமது ஊரில் தலைவர் இருக்கின்றார்கள். அவர் அனைவரிடமும் பேசுகின்றார். ஆனால், சரியான பெறுபேறு கிடைக்கவில்லை," என கொக்கிளாய் பகுதியைச் சேர்ந்த குமார தெரிவிக்கின்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "இந்த இடத்தில் பாலமொன்றை அமைப்பதற்கு எமக்கும் விருப்பம். கடலில் ஆராய்ந்தார்கள். உள்ளே உள்ள கல் பழுதடைந்துள்ளதாக கூறினார்கள். அந்த இடத்தில் மாத்திரம் கல் இல்லை. வேண்டியளவு கற்கள் இருக்கின்றன. அங்கு பாருங்கள் என கூறினோம். அந்த இடத்தின் ஊடாக செய்யுமாறு கேட்டோம்," என்றார்.

"அவசரமாக நோயாளர் ஒருவரை படகில் புல்மோட்டைக்கு அழைத்து செல்லும் போதே நோயாளர் இறந்து விடுவார். வாகனத்தில் ஏற்றி படகில் ஏற்றி அங்கு சென்று வாகனம் வரும் வரை காத்திருந்து அழைத்து செல்ல வேண்டும். அவசரத்திற்கு அழைத்தாலும் வரமாட்டார்கள். சென்று வருவதற்கு படகில் 2,000 ரூபா எடுக்கின்றார்கள்," என கொக்கிளாய் பகுதியைச் சேர்ந்த குமார தெரிவிக்கின்றார்.

**ஜனாதிபதி செயலகத்தின் பதில் என்ன?**

மஹிந்த ராஜபக்ஸ, ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் புல்மோட்டை மற்றும் கொக்கிளாய் பகுதிகளை இணைக்கும் வகையிலான பாலத்தை அமைக்க முயற்சித்ததாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், இந்த பாலம் அமைக்கப்படுவதற்காக முயற்சிகள், பாலம் இதுவரை அமைக்கப்படாமைக்கான காரணம் உள்ளிட்ட தகவல்களை, தகவலறியும் சட்டத்தின் ஊடாக, பிபிசி தமிழ், ஜனாதிபதி செயலகத்திடம் கோரியது.

**இதற்கு ஜனாதிபதி செயலகம் பதில் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.**

"உங்கள் தகவல் கோரிக்கையினால் கேட்கப்பட்டுள்ள தகவல்கள் 2016-ஆம் ஆண்டு 12-ஆம் இலக்க தகவல்களை அறிந்துக்கொள்ளும் உரிமைகள் தொடர்பான சட்டத்தின் 3(1)-ஆம் பிரவுக்கமைய பொது அதிகார உரிமையில், பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கும் ஓர் தகவல் அல்ல என்பதனால் உங்கள் தகவல் கோரிக்கையை நிராகரிக்க நேர்ந்துள்ளதை தயவுகூர்ந்து அறிவித்துக்கொள்கின்றேன்," என ஜனாதிபதி மேலதிக செயலாளரும், தகவல் உத்தியோகத்தருமான எஸ்.கே. சேனாதீரவினால் பதில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் இந்த இடத்தில் பாலமொன்று நிர்மாணிக்கப்படுவது மிகவும் முக்கியம் வாய்ந்து என இரண்டு மாகாண மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

